ரூபா விலை 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 25 | மார்கழி 25 | ரபி-அவ் 24 | இதழ் 332

யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 9—1—83


“வடபகுதி லயன்ஸ் கழகம்

## தமிழ் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வருகிறது”

### யாழ். மாநகர முதல்வர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

“வடபகுதி லயன்ஸ் கழகம் தமிழ்பேசும் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வருகிறது என்று யாழ் மாநகராட்சிமன்ற முதல்வர் திரு இராஜா விசுவநாதன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

லயன்ஸ் கழக யாழ். மாவட்ட முன்னாள் கவர்னர் லயன்சக் விஜயநாதன், சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சர்வதேசப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை யொட்டி யாழ் லயன்ஸ் கழகம் நேற்று மாலை யாழ். மாநகர மண்டபத்தில் வரவேற்புவிழா வொன்றை நடாத்தியது. இவ்விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் இவ்வாறு பாராட்டுத் தெரிவித்தார்.

பாராட்டு விழாக்குழுத் தலைவர் டாக்டர் லயன் யோகு பசுபதி தலைமையில் நடைபெற்றது.

லயன் விஜயநாதன் மங்கலவாத்திய சகிதம் விழா

(8ம் பக்கம் பார்க்க)

தமிழர் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க ஜனூர் முயற்சி

# ஐந்து மாநிலங்கள் உருவாகும் சாத்தியக்கூறு!

## தொண்டமான் பிரதி ஜனாதிபதி?

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்னைகளை நிரந்தரமாகத் தீர்த்துவைப்பதற்கான உயர்மட்ட அரசியல் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன.

அரசாங்க உயர் தலைவர்கள் மற்றும் தமிழ்ப்பிரமுகர்களுக்கிடையில் இணக்கம்ஒன்றைத் தோற்றுவிக்கும் வகையில் இரு தரப்புக்கும் நம்பிக்கையான சில பிரமுகர்கள் இரவு பகலாக முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றன.

இந்த முயற்சிகளில் கனடாவிலிருந்து தற்போது இலங்கைவந்திருக்கும்டாக்டர் வில்சன் பெரும் பங்கு வகிப்பதாகத் தெரிகின்றது.

இந்த முயற்சிகளின் பயனாக மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும அரச உயர் தலைவர்களுக்குமிடையில் சந்திப்புகள் ஆரம்பமாகலாம் என்றும் கூறப்படுகின்றது.

இதே சமயம் தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆளும் வகையில் ஓர் ஏற்பட்டினை நாட்டின் ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளையாத வகையில் செய்வது பற்றியும் ஆலோசிக்கப்படுவதாகத்தெரிகின்றது.

நாட்டை 5 மாநிலங்களாக வகுத்து ஒவ்வொரு மாநிலமும் அப்பிரதேச மக்களின் பிரதிநிதிகளால் ஆளப்படுவதற்கான திட்டமொன்று பரிசீலனையிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இத்திட்டத்தின்படி நாட்டில் 5 மா நிலங்கள் உருவாக்கப்படும். ருகுணு, ரஜரட்ட, மாயாரட்ட ஆகிய வற்றுடன் வடக்கு கிழக்கு மாநிலங்களும் நடைமுறைக்குவரும்.

இதில் வடக்கையும் கிழக்கையும் ஒன்றாக இணைப்பதா அல்லது வெவ்வேறு மாநிலங்களாக இருக்க விடுவதா என்பது பற்றியும் தீவிரமாக ஆலோசிக்கப் படுகின்றதாம்.

இதற்கிடையில் உத்தேசிக்கப்பட்டுவரும் பிரதி ஜனாதி

(8ம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட கார் உரும்பராயில் மீட்பு!

[மாவிட்டபுரம்]

கொக்குவில் மேற்கில் பரீட்சை நிலையத்தில் நுழைந்து அங்கு காவல் புரிந்த பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து பொலிஸார் திருப்பிச்சுட்டதும் அங்கிருந்து ஓடிவிட்டதாகக் கூறப்படும் இளைஞர்களால் உடுவிலில் வைத்து கடத்தப்பட்டதாகக் கூறப்படும் கார் உரும்பராய் ஆஸ்பத்திரியருகில் அனாதரவாக விடுத்துச் செல்லப்பட்டுக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக்காரை சுன்னாகம் பொலிஸார் கைப்பற்றி பொலிஸ் நிலையத்தில் கொண்டுபோய் இப்பொழுது வைத்துள்ளனர்.

## கடுங்குளிருக்கு இந்தியாவில் 218 பேர் பலி!

புதுடில்லி, ஜன. 8

இந்தியாவின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிலவி வரும் கடுங்குளிருக்கு 218 பேர் பலியாகியுள்ளனர்.

இதனால் சிலபகுதிகளில் விமான ரயில் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன. பீகார் மாநிலத்தில் 38 பேரும் உத்தரபிரதேசத்தில் 7 பேரும் மேற்குவங்காளத்தில் 7 பேரும் கடுங்குளிருக்குப் பலியாகியுள்ளனர். (வெ)

3வது கிரிக்கெட் டெஸ்ட்

## பாகிஸ்தான் வெற்றி

இஸ்லாமாபாத் ஜன 8

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற 3வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் பத்து விக்கட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த டெஸ்ட் போட்டியில் இந்தியா முதலாவது இன்னிங்ஸில் 372 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 286 ஓட்டங்களையும் பெற்றது.

பாகிஸ்தான் முதலாவது இன்னிங்ஸில் 652 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் விக்கட்டுகள் எதுவும் இழப்பின்றி 10 ஓட்டங்களையும் பெற்றது.

இதுவரை முடிந்த மூன்று டெஸ்ட் போட்டிகளில் இரண்டில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது. ஒரு போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

8ம் பக்கம் பார்க்க]

யாழ். மாவட்டத்தில்

## கச்சாய் இரண்டாவது மாதிரிக் கிராமமாகும்!

### பிரதமர் அங்கீகாரம்

(ஏ. வி. மாணிக்கம்)

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள கச்சாய் என்னும் கிராமம் மாதிரிக்கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டு அங்கு 50 வீடுகள் சகல வசதிகளுடன் கட்டுவதற்கு பிரதமமந்திரியும் உள்நாட்டு வீடமைப்பு அமைச்சருமான திரு ஆர். பிரேமதாசா அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

கச்சாய் பகுதியிலுள்ள 20 ஏக்கர் நிலத்தில் இந்த மாதிரிக்கிராமம் அமைக்கப்படவுள்ளது

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் வடபகுதியில் அமைக்கப்படும் இரண்டாவது மாதிரிக் கிராமம் இதுவாகும்.

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கன்பொல்லை என்ற கிராமம் மாதிரிக்கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டு வீடு நிலமற்ற சுமார் 85 குடும்பங்க

(8ம் பக்கம் பார்க்க)

தென் மாநிலத் தேர்தல் முடிவுகள்:

## இந்திராவைராஜினாமாசெய்ய எதிர்க்கட்சிகள் கோரிக்கை!

புதுடில்லி ஜன. 8

இந்தியாவின் தென்மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரா, திரிபுரா ஆகியவற்றிற்கு நடைபெற்ற சட்டப்பேரவைத்தேர்தல்களில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியின் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்ததால் அவர் தமது பதவியை ராஜினாமாச் செய்யவேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கர்நாடகம், ஆந்திரா, ஆகிய மாநிலங்களில் 30 ஆண்டுகளாக ஆட்சி செலுத்திவந்த காங்கிரஸ் கட்சி இத்தேர்தலில் தோல்வியடைந்துள்ளது.

திரிபுராவில் இந்திரா காங்கிரஸ் இம்முறை கணிசமான தொகுதிகளைப் பெற்றும் அங்குள்ள மார்க்ஸிச கம்யூனிஸ்ட் கட்சியைப் பதவியில் இருந்து அகற்றமுடியவில்லை.

இந்திய எதிர்க்கட்சித் தலைவர்களிலொருவரான திரு. வாஜ்பாய் இந்திய நாட்டை ஆள திருமதி காந்திக்கு அதிகாரமில்லை என்று தெரிவித்துள்ளார். இந்த மூன்று மாநிலங்களிலும் அவரின்கட்சி தோல்வியடைந்ததால் அவர் ராஜினாமாச் செய்யவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

திருமதி காந்தி இத்தேர்தல்களில் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. [வெ]

யாழ். பொதுசன நூலகத்திற்கு

## ரூபா 2, 32, 000 வழங்க லயன்ஸ்கழகம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூல் நிலையத்தின் சிறுவர் பகுதிக்கு, லயன்ஸ் கழகம் 2 லட்சத்து 32 ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்யத் தீர்மானித்துள்ளது.

இத்தொகையின் முதல் பகுதியாக 60-ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை இலங்கை இரு மாவட்ட ஆளுநர்களிலொருவரான வைத்திய கலாநிதி லயன் ஆரியம் நல்லையா வைத்திய கலாநிதி லயன் யோகு பசுபதியிடம் நேற்றுக் கையளித்தார். இந்தக் காசோலையை யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு இராஜா விசுவநாதனிடம், லயன் யோகு பசுபதி வழங்கினார்.

லயன்ஸ் கழக யாழ். மாவட்ட முன்னாள் கவர்னர் லயன் சக்கரவர்த்தி விஜயநாதன், லயன்ஸ் கழகத்தின் சர்வதேசப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதையொட்டி நடைபெற்ற பாராட்டு விழாவில் வைத்து இந்தநிதி வழங்கப்பட்டது. [மா]

“தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்கள்

## 1982ல் அரசுக்கு விற்பனை வரியாக ரூபா 48 லட்சம் வழங்கியுள்ளன”

### கூட்டுறவு உதவி ஆணையாளர் தகவல்

[சித்தங்கேணி]

தெங்குபனம் பொருள் கூட்டுறவு சங்கங்கள் அரசாங்கத்திற்கு 1982ம் ஆண்டு பத்து வீத விற்பனை வரியாக 48 லட்சம் ரூபாவை செலுத்தியுள்ளார்கள்.

இத்தகவலை கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. ச. வேலாயுதபிள்ளை தெரிவித்தார். திரு. வேலாயுதபிள்ளை மேலும் கூறியதாவது:

தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் 1982ம் ஆண்டில் சீவல் தொழிலாளர் சமூகத்தினருக்குக் கொள்வனவுப் பணமாகவோ சம்பளமாகவோ நூறு லட்சம் ரூபாவிற்கு மேலாகப்பணம் வழங்கியுள்ளது. இதைவிட

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரு கடைக் கட்டிடங்களின் பின்புறம் பத்தடி அறையும் பதினைந்தடி நிலத்துடனும் பருத்தித்துறை பஸ் நிலையத்துக்கு அண்மையில் பிரதான வீதியில் இரண்டும் சேர்த்தோ அல்லது தனியாகவோ விற்பனைக்கு. தொடர்பு: ப சு ஐயர், 16, கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24416. [5779]

யாழ்ப்பாணம் கொன்வென்ட் வீதி, இல. 16இல் உள்ள 3 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 27. கதீட்ரல் ரோட், யாழ்ப்பாணம். [5768]

புதிய, பழைய தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் (All Key Board, ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு தொடர்பு; நிர்வாகி சங்கர், ஹாட்லி இன்ஸ்ரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 5561

சகல வசதிகளும் கொண்ட கல்வீடு 2½ பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் P சுப்பிரமணியம், No; 58, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். 5723

யாழ்ப்பாணம் — பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தைக்கருகாமையில் 2 பரப்பு சற்சதுரக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருவாசுதேவன், "சாந்த விலா" ஓவசியர்ஸ் ஒழுங்கை, தெல்லிப்பளை. 5748

## தேவை

பாதுகாவலர்கள் தேவை. பென்ஷனியர்களும் வரலாம். நற்சாட்சிப்பத்திரங்களுடன் 11-1-83 பகல் 11 மணிக்கும் 12 மணிக்குமிடையில் தெல்லிப்பழை சந்திக்கருகிலுள்ள ஆனந்தா பேக்கரிக்கு நேரில் வரவும். [5784]

கற்பூரத் தொழிலில் அனுபவம் உள்ள 20 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். "ஸ்ரீலிங்கம்", கைதடிச்சந்தி, கைதடி. [5765]

வெளியூர் சிறிய தமிழ்க் குடும்பத்திற்கு நகர எல்லைக்குள் அல்லது சமீபமாக சிறிய அல்லது பகுதி வீடு தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல 5774, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [5774]

எமது ஸ்தாபனத்துக்கு நன்கு தேர்ச்சி பெற்ற தச்சுவேலை, பொலிஷ் வேலை செய்பவர்கள் உடன் தேவை நேரில் வரவும் ஸ்ரான்லி பேணிசிங் பலெஸ், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். [5782]

அனுபவம் வாய்ந்த எலெக்ரிக் வெல்டர். நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும் புர்ஹானி இன்டஸ்ரீஸ் அன்ட் ஸ்டோர்ஸ், 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [5781]

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) சகல வசதியுடனும் 4 அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5776 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 5776

## விற்பனைக்கு

முளாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். அருணாசலம், "சுந்தரகுமார் ரவல் சேவிஸ்", 301, கஸ்தூரியார் வீதி, (மேல்மாடி) யாழ்ப்பாணம். 5738

9x10 7x10 2 சோடி இரும்பு சுருக்கு கேட் கழற்றிய நிலையில் விற்பனைக்குண்டு. S. A, C. ஆபித், 108/2, கலீபா அப்துல்காதர் வீதி, சோனகதெரு, யாழ்ப்பாணம். 5772

## சேவை

TV அன்ரீனா பொருத்துவது ஒரு நுணுக்கமான தொழில் இத்தொழிலில் நாங்கள் தேர்ச்சி பெற்றவர்கள் சகலவிதமான அன்ரீனாக்கள் TV பூஸ்டர்கள் எல்லாம் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். "துர்க்காஸ்", 68, கே. கே எஸ். வீதி, சுன்னாகம். (5777)

திருபானந்தவாரியார், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திலும் செல்வச்சந்நிதி ஆலயத்திலும் நிகழ்த்திய கதாப்பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் 2 மணித்தியாலங்கள். இப்பொழுது ஒலிப்பதிவு செய்துகொடுக்கிறோம். துர்க்காஸ், 68, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். [5778]

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1983

## மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் 17-1-1983ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல்செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

அதிபர்.

தொலைபேசி எண்: 22617,
376, பிரதானவீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 5698

## கரைச்சி வடக்கு ப.நோ. கூ. சங்கம் பரந்தன்

## கேள்வி விண்ணப்பங்கள்

எமது சங்கத்தில் கீழ்க்காணப்படும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு. அவற்றை எமது காரியாலய வேலை நேரத்தில் பார்வையிட்டு, உங்கள் கூறுவிலைகளை ரெண்டர்] 20-01-83 க்குப் பித்தரமல் பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன் என விலாசமிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்ப விபரத்தனை எழுதி பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்,

1. பாவிக்கப்பட்ட லொறி ரயர்கள்–
   அளவுகள்
   900X20 — 03
   8.25X16 — 01
2. கழிவு மா
3. சுவீப்பிங் சீனி

பொதுமுகாமையாளர்,
கரைச்சி வடக்கு,
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.
5775

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## அந்தியேட்டி கிரியையும் நன்றி நவிலலும்



கதிரவேலு (இரத்தினம்) நல்லம்மா
(கோப்பாய்)

தோற்றம்: 16-2-1925 மறைவு: 1-11-1982

மார்கழி மாதம் 1-ம் திகதி புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குலவிளக்கான கதிரவேலு நல்லம்மா அவர்களின் இறுதிக்கிரியையில் பங்கு கொண்டோருக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன்

10-1-83ல் திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக்கிரியைகளில்

கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (5783)

## தேடப்பட்ட சந்தேகநபர் பொது மக்களால் பிடித்து பொலிஸில் ஒப்படைப்பு!

(மாவிட்டபுரம்)

பலதிருட்டுக் குற்றங்கள் தொடர்பாக ஒரு வருடத்திற்கு மேலாக தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் பொதுமக்களின் உதவியுடன் கிராமசேவகரால் பிடிக்கப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரம் பெரியபுலோ என்னுமிடத்தைச் சேர்ந்த சந்தேகநபரான செல்லப்பா தெய்வேந்திரம் என்பவரே இவ்வாறு பிடிபட்டவராவார்.


சுழிபுரத்தைச்சேர்ந்த சடையன் துரைசிங்கம் என்பவரது சைகிள் திருட்டு தொடர்பாக சுழிபுரம் மேற்கு கிராமசேவையாளர் கந்தையா தர்மலிங்கத்திடம் மேற்படி நபர் செல்லப்பா தெய்வேந்திரம் மீது புகார் ஒன்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து கிராமசேவகர் பொதுமக்களது உதவியுடன் இவரை தேடிப்பிடித்துக் கொண்டனர். மேற்படி சைக்கிளைத் திருடிய நபர் அதனை அடகு வைத்து சூதாடியதாக விசாரணையில் தெரியவந்தது.

அதுமட்டுமன்றி இவர் ஏற்கனவே பலதிருட்டுச் சம்பவங்களில் தொடர்பு கொண்டிருந்தவரென்றும், மல்லாகம் நீதிமன்றத்தில பல வழக்குகள் தொடரப்பட்டிருந்த தென்றும் வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காமையால இவர்

[7-ம் பக்கம் பார்க்க]

**விற்பனையாகின்றன!**
இறக்குமதி செய்யப்பட்ட ஒட்டுப் பலகைகளும் அழகிய தேக்கம் முகப்புக் கதவுகளும்
வேண்டிய அகல, உயரங்களில் பெற்றுக்கொள்ளலாம்
**இப்ராகிம் ஜபார்ஜி,**
218, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன்: 22409




## தேவை

**உதவி மீன் விற்பனையாளர் (பெண்)**

யாழ்நகர் பேருந்து நிலையத்திலும், வானிலும் மீன் விற்பனை செய்வதற்கு, ஆகக்குறைந்தது 8ம் தரம் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் தகமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பப் படிவங்களை 14-1-83க்கு முன் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 5769
மே/பா. ஈழநாடு லிமிட்டெட்
யாழ்ப்பாணம். (5769)

உ

## திருமண அழைப்பு

ஷாந்தி மீரா -- எடி

ஐ. நா. சர்வதேச தொழில் அபிவிருத்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த (UNIDO) அப்பையா பத்மராஜா திருமதி சகு பத்மராஜா தம்பதிகளின் புதல்வி

**ஷாந்தி மீரா**
அவர்களுக்கும்

சுதந்திர தொழிற்சங்கங்களின் சர்வதேச சம்மேளனத்தின் ஜெனீவா காரியாலய பிரதி பணிப்பாளர்

**எடி லொறிஞ்ஸ்ஸென் கிறிஸ்ரியன்ஸ் ஸென்ஸ்**
அவர்களுக்கும்

திருமணம் நிச்சயதார்த்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்து சம்பிரதாயத்துக்கமைய திருமண வைபவம் 1983 ஜனவரி 15-ம் திகதி சுவிட்சலாந்து தேசத்து ஜெனீவா நகரிலுள்ள சலி கொமுயுனேல் டி கொலெனி மண்டபத்தில் (The Salle Communale De Cologny, Geneva) நிகழும்.

நண்பர்களும், உறவினர்களும் தயவுசெய்து இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவும்.

31, செமின் டி கிறுங்கி கனல்,
1208, ஜெனீவா.
31, CHEMIN DE GRANGE CANAL,
1208, GENEVA,

5785

# மக்கள் காணக்கூடிய பொதுஇடத்தில்

# இன்று ராமராவ் முதல்வர்பதவி ஏற்பு!

புதுடில்லி, ஜன. 9

ஆந்திராவின் முதலமைச்சராக பிரபல நடிகரும், ஒன்பது மாதத்துக்குள் 'தெலுங்கு தேசம்' என்ற ஒரு கட்சியை அமைத்து மகத்தான வெற்றியைப் பெற்று, இந்திரா காங்கிரஸை மண் கவ்வச் செய்தவருமான என்.டி ராமாராவ் இன்று பதவி ஏற்கிறார். தன்னை வெற்றி பெறச் செய்த லட்சோப லட்சம் மக்களுக்கு சிரம் தாழ்த்தி நன்றி தெரிவித்து, அவர்களை மதிக்கக்கூடிய வகையில், மக்கள் தமது பதவிப் பிரமாண வைபவத்தைப் பார்க்கக்கூடியதாக ஒரு பொது இடத்தில், அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதாக அவர் அறிவித்துள்ளார்.

ஆந்திரா மாநிலத்தில் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற ராமராவ் கட்சியைச் சேர்ந்த 198 சட்டப்பேரவை உறுப்பினரும் ஒன்றுகூடித் தமது சட்டப்பேரவைத் தலைவராக ஒருமனதாக ராமராவைத் தெரிவுசெய்தனர்.

திரைப்படங்களின் மூலம் தெலுங்குபேசும் மக்களைத் தம் வசம் இழுத்த என்.டி ஆர், இப்போது ஆந்திரா மக்களின் அரசியல் தலைவராகவும் இடம் பெற்றுவிட்டார்.

கடந்த மார்ச் மாதத்தில், 'தெலுங்கு தேசம்' என்ற கட்சியை ஆரம்பித்தார். இந்தக் கட்சி ஆரம்பமானபோது, அரசியல் அவதானிகளிடையே பலவிதமான சர்ச்சைகள் இடம்பெற்றன. சினிமாச் செல்வாக்கை வைத்துக் கொண்டு அரசியலில் செல்வாக்கு இருக்கும் என்று 'தப்புக்கணக்கு'ப் போட்டுவிட்டார் ராமராவ் என்றுகூட இந்தியாவில் பிரபலமான ஒரு ஏடு அப்போது எழுதியிருந்தது.

தமிழ்நாட்டில் எம்.ஜி ஆர். நடிகராக இருந்தபோதிலும் அவர் அதேநேரத்தில், நீண்ட பல ஆண்டுகாலமாக அரசியலிலும் முக்கிய பங்கு வகித்து வந்தார். அண்ணாவுக்கு வலது பக்கமாகவும் திகழ்ந்து வந்தார். இதனால், தமிழ் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை அவர் கைப்பற்றியபோது, அ தி.மு.க. என்ற ஒருபுதிய இயக்கத்தை ஆரம்பித்திருந்தாரே தவிர, அரசியலுக்குப் பழையவராகவே இருந்தார்!

ஆனால், என். டி. ராமராவ் திடீரென அரசியலுக்குள் குதித்தார். மக்களின் ஏகோபித்த அன்பையும், மதிப்பையும் பெற்றவர் என்பதை நிரூபித்துவிட்டார்.

ஊழலற்ற ஆட்சியொன்றை நடாத்துவதே தன் நோக்கம் என்கிறார் அவர்.

## என். டி. ராமராவ்

## ஒரு ரூபாய் மட்டுமே சம்பளமாகப் பெறுவார்!

புதுடில்லி, ஜன. 8

ஒரு ரூபாயை மட்டும் சம்பளமாகப் பெறப் போவதாக ஆந்திரா மாநில சட்டசபைத் தேர்தலில் பெரும் வெற்றியை ஈட்டியுள்ள பழம்பெரும் திரைப்பட நடிகர் என். டி. ராமராவ் அறிவித்துள்ளார்.

293 தொகுதிகளில், 198 இடங்களைக் கைப்பற்றியுள்ள ஆந்திரா மாநிலத்தின் ஆட்சிப்பொறுப்பைக் கைப்பற்றியுள்ள 'தெலுங்கு தேச'க்கட்சியின் தலைவரான ராமராவ் நேற்றுச் செய்தியாளர்களிடம் இந்தத் தகவலைக் கூறினார்.

ஆந்திராவின் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்கப்போகும் என். டி. ராமராவ், தமிழ் நாட்டில் எம். ஜி ஆரைப் போல செல்வாக்குமிக்க நடிகராவார். அதேநேரத்தில், மக்களின் அபிமானத்துக்கும், நம்பிக்கைக்கு முரியவர் என்பதை இத்தேர்தல் மூலம் நிரூபித்துள்ளார்.

மாமியார் இந்திராவால் கைவிடப்பட்ட இறந்த அவரது 2வது புதல்வர் சஞ்சேய்காந்தியின் மனைவி திருமதி மேனகா, நடிகர் ராமராவுடன் ஒப்பந்தமூலம் போட்டியிட்ட ஐந்து தொகுதிகளில் மூன்றைப் கைப்பற்றியுள்ளார்.

## 'மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் இந்திராவுக்கு ஒருபடிப்பினை!'

புதுடில்லி, ஜன. 8

நடந்து முடிந்த மூன்று மாநில சட்டப்பேரவைத் தேர்தல்முடிவுகள் திருமதி இந்திரா காந்திக்கு சிறந்த ஒரு அரசியல் ரீதியான படிப்பினை என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

புதுடில்லியில் இருந்தவாறே மாநிலங்களின் ஆட்சியை நடாத்தலாம் என்ற திருமதி இந்திராவின் எண்ணத்தை அவர் இனியாவது மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் மேலும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

மாநிலங்கள் பற்றி சரியான கணிப்பு இல்லாது தலைநகரிலிருந்தபடி தமக்குத் 'தெரிந்தவர்'களை இந்திரா காங்கிரஸ் தலைவர்களாக மாநிலங்களில் நியமித்து, கடைசியில் தனது கட்சியை அழிவுப் பாதைக்கு இட்டுச்சென்றுவிட்டார் என்று இந்தத் தேர்தல் முடிவுகளை ஆராய்ந்த அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்திரா காங்கிரஸ் ஆந்திரா, கர்நாடகம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் படுதோல்வி அடைந்துள்ளது. இந்தத் தோல்விகள் மாநிலங்களுக்குக் கூடிய அதிகாரங்களை வழங்கவேண்டுமென்ற கோஷத்தைப் பலப்படுத்தும் என்றும், சுயாட்சிக்கோரிக்கை சக்திமிக்கதாகமிளிரும் என்றும் கருதப்படுகிறது.

### இந்திரா காங்கிரஸ் கூடுகிறது

இந்திரா காங்கிரஸ் தனது படுதோல்வி குறித்து ஆராய நாளை மறுதினம் கூடுகிறார்கள். கட்சி இதே நிலையில் சென்று கொண்டிருந்தால், இந்திரா காங்கிரஸ் பல மாநிலங்களை இழந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதென கட்சிக்குள் அபிப்பிராயமேற்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள இருபத்திரண்டு மாநிலங்களில் பதினைந்து மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் ஆட்சி புரிந்துவருகிறது.

## வவனியாமாவட்ட அபிவிருத்திசபை வரவுசெலவுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

[வவனியா]

வவனியா மாவட்ட அபிவிருத்திச்சபையின் இவ்வாண்டுக்கான அபிவிருத்திட்டமும் வரவு-செலவு திட்டமும் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு எம் சிற்றம்பலம் தலைமையில் சபை மண்டபத்தில் சபை கூடியது.

தலைவரால மேற்படி திட்டங்கள் சபையின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைவர் அபிவிருத்தித்திட்டம் பற்றிப் பேசுகையில் புது வேலைகளும் தொடர்ச்சி வேலைகளும் உண்டென்றும் நிகழ்ச்சிதிட்டம் மூன்றின் கீழ் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிக்குள் தொடர்ச்சி வேலைகள் இருப்பதாகவும் தெரிவித்தார். இவ்வாண்டுக்கான அபிவிருத்தித் திட்டம் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைவர் தொடர்ந்து பேசுகையில்:- 1983-ம் ஆண்டுக்கான எதிர்பார்க்கப்படும் வரவு ரூபா 18 இலட்சத்து 42 ஆயிரத்து நூற்று ஒரு ரூபா செலவீனம் 18 இலட்சத்து ஐயாயிரத்து தொளாயிரத்து எண்பத்திரண்டு ரூபா. மேலதிகத் தொகையான முப்பத்தி ஆறுயிரத்து நூற்றுப் பத்தொன்பது ரூபாவினால் இவ்வாண்டுக்

(6-ம் பக்கம் பார்க்க)

## "மகன்கள், மருமகன்களிடமே கருணாநிதிக்கு நம்பிக்கை!"

### தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். தாக்கு

மதுரை, ஜன. 7

"கலைஞர் கருணாநிதிக்கு தி. மு. க. தொண்டர்களின் மேல் நம்பிக்கை இல்லை! மகன்களிடமும், மருமகன்களிடமும் தான் நம்பிக்கை வைக்கிறார்! இதனால் மனக்கசப்படைந்த தொண்டர்கள் அவரைவிட்டுப் பிரிந்து செல்கிறார்கள்" என்று தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் கூறினார்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட தி. மு. க வைச்சேர்ந்த உறுப்பினர் எம். ஜி ஆர் முன்னிலையில், அவரது அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தில் சேர்ந்தனர் அந்த வைபவத்தில் எம். ஜி. ஆர். உரையாற்றினார்.

எம் ஜி. ஆர். தமது உரையில் கூறியதாவது:

1980ம் ஆண்டு நானும் கருணாநிதியும் சந்தித்து தி மு. க — அ தி மு க இணைப்பப் பற்றிப் பேசினோம். 'நீங்கள் முதலமைச்சராக இருங்கள் உங்கள் கொடியே கட்சிக் கொடியாக இருக்கட்டும் ஆனால் கட்சியின் பெயர் தி மு க. என்று இருக்கவேண்டும் என்று கருணாநிதி என்னிடம் கேட்டுக்கொண்டார். அதற்கு நான், நாம் இணைவதற்கு முதல், தொண்டர்கள் இணைய வேண்டும். அதனால் இப்பிரச்னையைத் தொண்டர்கள்முடிவு செய்யவேண்டும். நாம் இருவரும் தொகுதி உடன்பாடு செய்து கொள்ளவேண்டும்.

"ஓர் இடத்தில் என்கட்சி நின்றால் அதை எதிர்த்து உங்கள் கட்சி நிற்கக்கூடாது. இப்படி உடன்பாடு செய்து கொள்ளவேண்டும் பின்னர் பொதுக்குழு அமைத்து அதன் பின் இணைப்புப்பற்றி தீர்வு காணலாம்' என்று கருணாநிதியிடம் கூறினேன். அவர் அது பற்றி பேசவே இல்லை! தனது தொண்டர்களைக் கலைஞர் மதிப்பதில்லை. தான் தான் தி. மு கழகம் என்பது அவர் நினைப்பு இதனால் அவரை விட்டுத் தொண்டர்கள் விலகி, விலகிச் செல்கிறார்கள்.

1972-ல் கட்சியை விட்டு, என்னை நீக்கும்போது, என்மீது காங்கிரஸுடன் கூட்டு இருப்பதாகக் குற்றஞ்சாட்டினார். யார்மீதாவது தனக்குப்பிடிக்கவில்லையென்றால் இப்படி அபாண்ட பழிகளைச் சுமத்தி, அவரைத் தி. மு. க.வைவிட்டுக் கலைத்துவிடுவார் தி.மு.க. தொண்டர்கள் இதனைப்புரிந்து கொள்ள வேண்டும்.

"நான் நிதானமாக, மெதுவாகப் பேசுகிறேன் ஏன் தெரியுமா? வார்த்தைகளைக்கொட்டினால் மீண்டும் எடுக்கமுடியாது.

கலைஞர்கருணாநிதியைப் போன்று எனக்கு வார்த்தைகளை அளக்காமல் பேசத்தெரியாது எவர்மீதும் குற்றஞ் சுமத்தும்போது மிகக்கவனமாக இருக்கவேண்டும்.

இப்படிப் பேசினார் எம். ஜி. ஆர்.

## முதியோர் தினவிழா

[புலோலி]

புலோலி மேற்கு கிராமோதய சபைப் பகுதிக்குள் இருக்கும் முதியோர்களைக் கௌரவிக்குமுகமாக கிராமோதய சபைத் தலைவி திருமதி. மகேஸ்ரி பாலகிருஷ்ணன் தலைமையில் முதியோர்தின விழா அண்மையில் கொண்டாடப்பட்டது இவ்விழாவின்போது முதியோர்களுக்கு உடுபிடவைகளும் வழங்கப்பட்டன.

விசேடச்சேவை அலுவலர் திரு அருளனந்தம் உட்படப் பலர் இவ்விழாவிலே உரையாற்றினர். (க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர
நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

1'9, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 23199 தந்தி: வைரம்

## சேர்.பொன் ராமநாதன் 59-வது நினைவுதினம்

# அறிஞர், அரசியல்ஞானி சிறந்த தேசபக்தர்!

சேர். பொன். அருணாசலம் 1924ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி தென் இந்தியாவில் க்ஷேத்திர யாத்திரை மேற்கொண்டிருந்த வேளையில் மதுரையில் சுகவீனமுற்று இவ்வுலக வாழ்வை நீத்தார் 1853 செப்டம்பர் 14ம் திகதி பிறந்த இவர் 1883ம் ஆண்டு ஸ்வர்ணம் அம்மையாரை மணமுடித்தார். ஆரம்பத்தில் மானிப்பாயிலும், பின்னர் கொழும்பிலும் வாசம் செய்த அவர்களுக்கு ஆண் பிள்ளைகள் எண்மரும், பெண் பிள்ளைகள் ஐவரும் பிறந்தனர்.

சேர். பொன்னம்பலம் அருணாசலம் முதலில் ஓர் அறிஞர், அரசியல் ஞானி, தேசபக்தர், சிறந்த நிர்வாகி. இலங்கைப் பல்கலைக்கழக இயக்கத்தின் முன்னோடியாகவும் அரசாங்கத்துறை சீர்திருத்தவாதியாகவும் அவர் திகழ்ந்தார்.

பொன்னம்பல முதலியார்- செல்லாச்சி தம்பதிகளின் மூன்று குமாரர்களில் இவரே கடைக்குட்டி.

இப்பொழுது றோயல் கல்லூரி என அழைக்கப்படும் கொழும்பு அக்கடமியில் பயிலும் காலையில் மகாராணியாரின் புலமைப்பரிசையும், சிறந்த மாணவருக்கான டேர்ண் பரிசையும் பெற்றார். இதுபற்றி அப்போதைய கல்லூரி அதிபர் கலாநிதி பார்க்ஸ் ரொம்ப்போக் எழுதுகையில், "எனது 40 ஆண்டுகால அனுபவத்தில இந்த அளவு திறமையைக் காட்டிய இளைஞனைக் கண்டதில்லை" என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

1870ல் ஆங்கில பல்கலைக்கழக புலமைப்பரிசிலைப்பெற்று கேம்பிறிட்ச் கிறிஸ்தவக் கல்லூரியில் பயிலச் சென்றார்.

1875ல் அருணாசலம் சிவில் சேவைப் பரீட்சைக்குத் தோற்றி முதலாவது இலங்கையர் என்ற முறையில் அச்சேவையில் அடியெடுத்துவைத்தார்.

முதலில் கொழும்பு அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் பின்னர் கண்டி பொலிஸ் நீதிமன்றத்திலும் பணிபுரிந்தார் பின்னர் பொலிஸ் நீதவானாக நியமனம்பெற்று நாட்டின் பலவேறு இடங்களிலும் பணிபுரிந்தார்.

மட்டக்களப்பில் அவர் மாவட்ட நீதவானாகக் கடமையாற்றிக்கொண்டிருக்கையில் அப்போதைய கவர்ணர் சேர். ஆதர் தர் கோல்டன் அவரை சுமார் 30 சிரேஷ்ட அதிகாரிகள் இருக்கத்தக்கதாக பதிவாளர்நாயகமாகவும், மேற்கு மாகாண பிஸ்கால் அதிகாரியாகவும் நியமித்தார். இதனால் சிவில் சேவையாளர் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது. இங்கிலாந்துக்கு ஆட்சேபனைகளும் பறந்தன. ஆனால் திறமையை மதித்து கவர்ணர் அசைந்துகொடுக்கவில்லை.

1901ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அப்போதைய கவர்ணர் சேர் வெட்றிஜ்வே யாங் திரு. அருணாசலத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கைபற்றி 'மோர்னிங் Leader' என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஆர்மண்ட் டி சௌஸ்சா என்பவர் எழுதுகையில், 'அரசாங்க அறிக்கை என்றால் பொதுமக்கள் விரும்பிப் படிக்கமாட்டார்கள் ஆனால் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பற்றிய சேர் பி. அருணாசலத்தின் அறிக்கையில் காணப்படும் வரலாறுசமயம்பற்றிய குறிப்புகளில் அடிசனின் மொழிநடையும், மக்காலியின் சொல்வன்மையும், மம்செனின் வரலாற்றுநுண்ணறிவும் செறிந்த

காணப்படுகின்றன" என்று குறிப்பிட்டுள்ளார்.

1912ம் ஆண்டில் அப்போதைய கவர்ணர் சேர் ஹென்றி மக்கலம் திரு. அருணாசலத்தை சட்டநிரூபண சபையில் உறுப்பினராக்கினார்.

1913ம் ஆண்டுஅவர் பொதுச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார் - அதே ஆண்டு அவருக்கு சேர் பட்டம்அளிக்கப்பட்டது

1915ல் சேர் அருணாசலம் தேசிய சீர்திருத்தத்தை உத்தேசித்து இலங்கை தேசிய சங்கத்தை உருவாக்குவதில் ஈடுபட்டார் இந்த இயக்கம் பின்னர் இலங்கை தேசிய காங்கிரஸாகப் பரிணமித்தது.

சேர். அருணாசலம் சேர் ஜேம்ஸ் பீரிஸின் ஆதரவுடன் இலங்கை சமூகசேவைக் கழகத்தை ஆரம்பித்தார். அதன் ஆரம்பத் தலைவராகவும்தெரிவு செய்யப்பட்டார்.

இந்த இயக்கத்தின் சார்பில் முதலில் இரவு பாடசாலைகளை அவர்ஆரம்பித்தார்.கொழும்பு சேரிப்பகுதிகளுக்குச் சென்று தொழிலாளர்களுக்கு கல்வி புகட்டினார். கைத்தொழில் வழங்கப்படுவதோடு குடிசைக் கைத்தொழில்களும் புதுப்பிக்கப்பட்டன.

இலங்கையில் முதன்முதல் தொழிலாளர் சங்கத்தைச் சேர் அருணாசலமே தொழிலாளர் சங்கத்தில் முதலாவது தலைவராக அவர் அமர்ந்தார். திரு. பெரிசுந்தரம் அதன் செயலாளர் ஆனார்பிற்காலத்தில் இவர் ஓர் அமைச்சராகக் கடமையாற்றினார் தொழிலாளர் சகாய சங்கம் ஒன்றையும் இவர் நாட்டில் அவர் உருவாக்கினார்.

சிறுவா ... அவர் தீவிர அக்கறைகொண்டிருந்தார் தாய்மொழியை போதனாமொழியாக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியவர்களில் அவர் முதன்மை பெறுகின்றார். இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்றகருத்தை முதலில் வெளியிட்டவர் அவர் அவருடன் டாக்டர் ஆனந்த குமாரசாமியும் இக்கருத்தை ஆதரித்தார்.

அவர் சிறந்த ஒரு வரலாற்றாசிரியராகவும் திகழ்ந்தார் வரலாற்று நூல்களையும் எழுதினார்.

1923ம் ஆண்டு இலங்கை தமிழர் கழகத்தை சேர் அருணாசலம் நிறுவினார் தமிழர்களுக்கான சமூக, கலாசார நிறுவனமாக இதைப்பயன்படுத்த அவர் விரும்பினார்.

யாழ்ப்பாணத்தில செந்தமிழ் பரிபாலனசபை என்ற பெயரில் தமிழ் இலக்கிய சங்கம் ஒன்றையும நிறுவினார்.

முத்துவாரத்தில் ஆனைக்குட்டி சுவாமிகளின்சமாதியடியில் சிவன் கோவில் ஒன்றை அருணாசலம் தம்பதிகள் உருவாக்குகினார்கள்.



தஞ்சாவூரைச்சேர்ந்த ஞானி ஒருவரை சேர் அருணாசலம் தமது ஞானகுருவாக ஏற்றிருந்தார். கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் பயிலும் காலத்திலிருந்தே தமதுநெருங்கிய நண்பராக விருந்துவந்த திரு. எட்வார்ட் கார்ப்பெண்டர் என்பவருக்கு இந்த ஞான குருவை அவர் அறிமுகப்படுத்தினார்.

குருநாகலையில் மாவட்ட நீதிவானாக திரு. அருணாசலம் இருந்தகாலத்தில் அங்கு விஜயம் செய்த திரு. கார்ப்பெண்டர் அவரது ஞானகுருவையும் சந்தித்தார். அந் நிகழ்ச்சி பற்றி அவர்பின்னர் கட்டுரைகள் வரைந்துள்ளார். சேர் அருணாசலத்தின் மறைவின் பின்னர் திரு. கார்ப்பெண்டர் அவரது கடிதங்கள் சிலவற்றைத்தொகுத்து 'கிழக்கின் ஒளி' என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். அந்த நூலில் ஓர் இடத்தில் திரு கார்ப்பெண்டர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

திரு. அருணாசலத்துக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் 80 அல்லது 81ம் ஆடுபவாக்கில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு புத்தகத்தைஅவர்எனக்கு கொடுத்தார் அப்பொழுது அந்நூல்பற்றி இங்கிலாந்தில் அதிகம் அறிமுகமில்லை அதுதான் பகவத்கீதை.இதைப்படித்த பின்னர்தான் என்மனம் விடுதலை பெற்று எனக்குள் தேங்கிக் கிடந்தவையாவும் உருப்பெற்று வெளிவரத்தொடங்கின "ஜனநாயகத்தை நோக்கி" என்ற நூல் வெளியாயிற்று கேம்பிறிஜ் ஏதோ ஒரு ஒன்று கூடலின் போதுதான் திரு: அருணாசலத்தை நான் சந்தித்தேன. அவரது இயற்கையான நல்ல பழக்கங்களும் நகைச்சுவையும் எல்லார் மத்தியிலும் பிரபலமாகியது, அவரது தந்தை இலங்கையில் நல்ல அந்தஸ்திலும், வசதிபடைத்தவராகவும் இருந்ததால் அருணாசலம் நல்ல கல்வியறிவு பெற்றிருந்தார். கிரேக்கம், லத்தீன், பிரெஞ்சு, ஜேர்மன் மொழிகளில் நல்ல தேர்ச்சியும் கிழக்கத்திய மொழிகளான தமிழ் சமஸ்கிருத இலக்கிய பயிற்சியும் பெற்றிருந்தார் பொதுவில் சகல விஷயங்களிலும் பாண்டித்திய முள்ளவராகவும் எல்லாவற்றையும் அறிந்துகொள்ளும் ஆர்வம் உள்ளவராகவும இருந்தார் அவருடன் பழகியதில் இந்திய இலக்கியங்கள் பற்றியும இலங்கையின் பழக்கவழக்கங்கள் பற்றியும் அறிந்து கொண்டேன்.

1890ம் ஆண்டு அவர் ஞானி ராமசாமியைப்பற்றி எனக்கு எழுதினார் அவரை வந்து சந்திக்குபடியும்கேட்டுக்கொண்டார், இதை நான் ஏற்றுக்கொண்டு அங்கு சென்றேன். ஆறுவாரகாலம் நாங்கள் இருவரும் இந்த ஞானியை தினமும் சந்தித்து அளவளாவினோம்.

அருணாசலம் இடைக்கிடை இங்கிலாந்துக்கும் வந்து சென்றார். கடைசியாக 1913ல் சேர் பட்டம்பெறுவதற்காக வந்தார் இந்த வருகைகளின் போது பல அரசியல் அதிகார பிரமுகர்கள் சீமாட்டிகள் என்று பலதரப்பட்டவர்களையும் அவர் சந்தித்த போதிலும் அவரது நடத்தையும் பழக்க வழக்கங்களும் எப்போதும் போலவே கவர்ச்சியாகவும் வெளிப்படையானதாகவும் இருந்தது ஆனால் இந்த மனிதரின் கலைத்துவ கலாச்சாரமும் உலக நடைமுறை அறிவும் அவர்சந்தித்த மனிதர்களை விட பலமைல்கள் உயர்வானதாகும்.

ஒரு முறை இரவு விருந்தொன்றின் போது அங்குவந்திருந்த பெரிய மனிதர்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்தப்

(5ம் பக்கம் பார்க்க)

## மெய்ச் சேவகனை மறக்கலாமோ?

82-ம் ஆண்டு முடியும் தறுவாயில் தன்னை நன்றாக நினைவுகூரத்தக்கவகையில் தமிழ்ப் பேசும் மாணவர்களை, எழுத்தாளர்களை, பேச்சாளர்களை, இலக்கியவாதிகளை எல்லாம் அவர்கள் 'உள்ளம் கவர்ந்த கள்வன் தேவனை" வானுலகிற்கு அனுப்பி வைத்தது மார்கழி 8ம் திகதி இரவு 10 மணிக்கு தேவருலகிற்கு பயணம் செய்தார் இத்தேவன். ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற 1½ மாதத்திற்குள் தனக்குக் கிடைத்த நேரத்தையெல்லாம், இலக்கியக் கருத்தரங்குகள், பட்டிமன்றம், ஆய்வரங்கு போன்றவற்றில் முழுமையாக தனது தேகநலத்தையும் பாராது ஈடுபடுத்தி கலா ரசிகர்களைக் களிப்புறச் செய்தார்.

முன்பின் தெரியாதவர்கள் அவரை முதன்முதல் சந்திக்கும்போது, ஹலோ, ஐசே என்ற வார்த்தையுடன் ஆரம்பிக்கும் நன்னெஞ்சன். இரண்டாம்முறை சந்தக்கும்போது தம்பி என்று உள்அன்புடன் உறவாடும் அந்த உன்னத உத்தமன் மறைந்தோ போனான்? இல்லை. அவரின் 'தென்னவன் பிரமராயன்" நாடக நூல் பல்கலைக்கழக மாணவர்களையும் இசைக் கருவிகளின்றி சப்த சுரங்களுடன் ஒலிக்கும் அவரின் ஹாஸ்யம் கலந்த, கணீரென்ற குரலோசை ஒலித்த விழாக்களும் விவாத அரங்குகளும, இயல், இசை, நாடக அரங்கேற்றங்களும், விமர்சன அரங்குகளும் இம் மெய்ச் சேவகனை மறக்க வைக்குமா?

- கு. குமாரசூரியர்

## ஒணறபிள் சபாரத்தினம்

மன்னார் பருத்தி ... முல்லைத்தீவு, வவுனியா கூட்டு (ஓா) தொகுதிக்கான சட்ட நிரூபண சபை உறுப்பினரா ஒணறபிள் தம்பையா முதலியார் சபாரட்ணம் அவர்களின் நினைவு தினம் இன்றாகும். குபேர குடியாம் ... முதலியார் சபாரட்ணம் அவர்களின் ஒரே வாரிசாக அதே மிடுக்கோடு வாழ்ந்தவர் அன்னார். 1917-ம் ஆண்டளவில் சட்டத்தொழிலை முல்லைத்தீவு நீதிமன்றில் ஆரம்பித்த அவர் மக்களாட்சியின் ஆரம்பக் கட்டமான சட்ட நிரூபண சபைத் தேர்தலிலே போட்டியிட்டு வெற்றியீட்டினார். இவர் காலத்தே தான் சேர். பொன்னம்பலம் இராமநாதன் சேர். வைத்திலிங்கம் துரைசாமி போன்ற முக்கிய பிரமுகர்களும் ஏனைய பாகங்களிலும் இருந்துவெற்றிபெற்றுச் சட்ட சபைக்குச் சென்றனர். அந்நாளில் அன்னார் வன்னி வளம் பெற உழைத்தார். சட்ட சபைக் காலம் முடிந்து அரச சபை ஆரம்பித்தபோது வன்னியிலே தனது தாய் மண்ணிலே போட்டியிட்ட அவர் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவர் பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் அவர்கள் தோற்கடித்தார் அக்காலத்தே சட்டசபைத் தேர்தலிலே வடமராட்சியிலே போட்டியிட்ட இளைஞரான ஜீ ஜீ.பொன்னம்பலம அவர்களுககு சட்ட சபையிலே பருத்தித்துறையையும் தான் பிரதிநிதித்துவப்படுத்திய காரணத்தால் தனது ஆசனத்தையும் ஒத்தாசையையும் நல்கினார்.

முதலாளித்துவக் கொள்கையில் அவருக்கிருந்த அசையாத நம்பிக்கையும் அவரது அரசியல் வாழ்வின் முற்று புள்ளிக்குக் காரணமாகும் ஆனாலும் இறக்கும் காலத்தில் தாராள மனப்பான்மையுடனும் தயாள

(5ம் பக்கம் பார்க்க)

# "சம்பளமே நோக்கமானால் அபிவிருத்திக்கு இடமில்லை!"

(முல்லைத்தீவு)

"எமது நாட்டின் அபிவிருத்தி முன்னேற்றம் என்பவற்றில் அக்கறையும் ஆற்றலும் நிறைந்தவர்கள் அபிவிருத்தி தொடர்பான உத்தியோகத்தர்களாகவோ, ஊழியர்களாகவோ கடமையாற்றுவது மிகவும் சிறப்பானதாகும். உத்தியோகம் பார்ப்பதும், சம்பளம் பெறுவதும் மட்டுமே தமது குறிக்கோளாக இயங்குபவர்களால் அபிவிருத்தியைக் காண முடியாது"

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் திரு எஸ் ஆறுமுகம் வற்றாப்பளை இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வற்றாப்பளை தேசிய இளைஞர் சேவைமன்ற பயிற்சி நிலையத்தில் பனம் பொருள் உற்பத்தி பயிற்சிப் போதனாசிரியராகப் பணியாற்றிய திருமதி ம. பாலசிங்கத்திற்கு மன்றத்தால் நடத்தப்பட்ட சேவை நலம் பாராட்டுவைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய திரு ஆறுமுகம் இவ்வாறு தெரிவித்தார்

முல்லைத்தீவு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இப் பயிற்சி நிலைய மாணவிகள் தலைவி செல்வி இ. ரதிலட்சுமி தலைமையில் நடந்த இப் பாராட்டு உபசரணை வைபவத்தில் திரு. ஆறுமுகம் மேலும் பேசுகையில: -

"இதுவரை இந்த நிலையத்தில் எந்தப்போதனாசிரியரும் செய்யாத பணியை பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் போதனாசிரியர் திருமதி பாலசிங்கம் செய்துள்ளது பாராட்டுக்குரியதொன்றாகும் மிகவு குறுகியகாலத்தில சிறந்த பயிற்சிகளை இப் பகுதி மாணவிகளுக்கு கொடுத்து பாராட்டும் பெற்றுச் செல்லும் இவரது பணியை இப்பகுதிப்பெண்கள் மறக்கமுடியாது என்றார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பிரதேச அலுவலர் திரு எஸ் சண்முகவடிவேல் பேசுகையில் இந்தநிலையத்தில் பலவிதமான பயிற்சிகள் கொடுக்கப்பட்டபோதும் பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி நடைபெற்றதுஇதுவே முதல்முறையாகும். இப்பயிற்சியை ஆரம்பித்தபோது பலர் 'பனை ஓலையில் என்னவிசேடமாகப பயில்வது" என்ற மன நிலையில் இருந்தனர். ஆனால் திருமதி பாலசிங்கத்தின் பயிற்சியை பார்த்தபின் ஏனைய பயிற்சி நிலையத்தவர்களும் தமக்கும் பயிற்சியைகொடுக்க வேண்டும் என்று கோருகின்றனர் என்றார்

வற்றாப்பளை தேசிய இளைஞர் சேவை மன்ற இளைஞர் கழகத் தலைவர் திரு த. தங்கவேலாயுதம் உட்பட மற்றும் மாணவிகளும் உரையாற்றினர்

திருமதி மா. பாலசிங்கம் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு உபசாரத்துக்கு நன்றி கூறினர்.

# கலைஞர் வேல்ஆனந்தன் குழுவினரின் கலைப்பயணம்

# 3 நாடுகள் - 90 நாட்கள்!

''கலைக்கோயில்'' வேல் ஆனந்தன் தனித்துவமிக்க கலைஞராக இலங்கையில் திகழ்பவர்!

— எழிலும், எடுப்பும், இறைத்தன்மையும் பெற்ற ஆடற்கலையை ஒரு சிலரால் தான் வடிவமைத்து உணர்த்த முடியுமென்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் என்று கூட அவரைச் சொல்லலாம்!


கலைஞர் வேல் ஆனந்தன்

ஐரோப்பிய நாடுகளில் தொண்ணூறு நாட்கள் அவரும், அவரது குழுவினரும் சமீபத்தில் மேற்கொண்ட கலைப்பயணம் அவர்களுக்கு மேலும் நல்ல புகழைத்தேடிக் கொடுத்திருக்கிறது!

கலைஞர் வேல் ஆனந்தன் என்றதும நமது நினைவுகளில் வந்து நர்த்தனமாடுபவர் ஆடற் செல்விபத்மினிநடராசா தான் — சிவதாண்டவம் கண்களுக்குள் நுழைந்துசதிராடுகிறது.

## சர்வதேச கலைஞரானார்

1973ஆம் ஆண்டு மக்கள் தியேட்டர் நிறுவனத்தினால் இந்த இருவரும் அழைக்கப்பட்டு திருவனந்தபுரத்தில் ஆடற்கலையை அழகு செய்தனர்! அப்போது கலைஞர் சர்வதேச அரங்குகளில் தம் திறமையை நிலைநாட்டி இருப்பியுள்ளார்

கோபிநாத்தைக் குருவாகக் கொண்டு கதகளி முறையில் நிபுணத்துவம் பெற்ற கலைஞர் வேல ஆனந்தன், 'கலைக்கோயில்' நிறுவனத்தை ஆரம்பித்து, கதகளிமுறையில் நாட்டியத்தைப் பயிற்றுவித்து வருகிறார்.

இலங்கை முழுவதும் 650 ஆடல் நிகழ்ச்சிகளை கலைஞரும், அவரது குழுவினரும் இதுவரை நடாத்தியிருக்கின்றனர்!

லண்டன், ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளிலும் கலைஞரதுகுழு சென்று திரும்பிய அனுபவங்களை மூத்தமணியாகத் திகழும் பத்மினி நடராசாவுடன் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது

கலைஞருக்கு ஈடுகொடுத்து சக்தியாக தாண்டவநடனமாடும்போது பத்மினியிடம் கலைத்துவம் கொஞ்சி விளையாடுவதைப் பார்த்திருக்கிறேன்; அவர் பேசினார்.

## பத்மினி அனுபவம்

''டேப்பில்தான் நிகழ்ச்சிகளைச் செய்தோம். இலங்கையில் நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளை ஆகிரிகருடன் செய்த அனுபவம் எங்களுக்கு இருந்தாலும், 'டேப்' அனுபவம் முதல்முறை எப்படிச்செய்யப் போகிறோம். என்ற திகில் இருந்தது! ஆனாலும் எமது ஆசிரியர் வேல்ஆனந்தன் அவர்கள் திறமையில் ஒருநம்பிக்கை எனக்கிருந்தது. அவர் எதைச் செய்தாலும், வெற்றியாகத்தான் இருக்கும் என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன். மேடையில் நிகழ்ச்சியைச் சமர்ப்பிக்கிறமுறை, சூழ்நிலைக்கேற்ப ரசிகர்களை அனுசரித்துச் சமர்ப்பிக்கிற தன்மை எல்லாமே ஆசிரியருக்கு மட்டும் சொந்தமான திறமைகள்! இதனால் நமக்கெல்லாம் ஒரு துணிவுபறந்தது''


— பத்மினி ஐரோப்பிய பயண ஆரம்பத்தினை இப்படியாகத் தொட ஆரம்பித்தார்.

லண்டன் பல்கலைக்கழக லேகன் மண்டபத்தில்தான் கலைஞர் குழுவின் முதல் நிகழ்ச்சி நடந்தது.

கலைஞரோடு பத்மினி மாலா கமலா, சந்திரவதனி ஆகியோர் இந்த நாட்டிய நிகழ்ச்சிகளில் பங்குகொண்டனர் பத்திரிகையாளரான 'மாலி' இக்குழுவின் மனேஜராகச் சென்றார்

## பெரியமேடை

அளவுக்கு மீறிய மேடை சில வேளை கலைஞர் குழுவை திணறவைத்தது. ஆனாலும் மேடைடெக்னிகுகளை நுணுக்கமாகக் கற்றுணர்ந்தவர் வேல் ஆனந்தன் இதனால், மேடையின் இருபகுதிகளையும் இருளாக்கி நிகழ்ச்சி நடைபெறும்


குமாரி பத்மினி நடராசா

இடத்தை மட்டும் ஒளிபெறச் செய்து, மேடையை நிறைவுள்ளதாக்கி, நிகழ்ச்சியை ஜமாய்த்து விட்டார்.

— இருவிதமான இருமணி நேர நிகழ்ச்சிகளை 'டேப்பில்' செய்தார்கள்.

## மேற்கு பெர்லினில்...

மேற்குப் பெர்லினில் நிகழ்ச்சியை நடாத்தியபோது குழுவுக்கு ஏற்பட்ட அனுபவத்தை என் கண்ணுக்குள் 'நுழைய' விட்டார் பத்மினி.

''மேடையைப் பார்த்த போது எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது அரை வட்ட வடிவமான மேடை. 8 அடிதான் நீளம். இதன் பின்னால், அதற்கு மேலே இன்னொரு அரைவட்ட வடிவ மேடை. இதற்குப் பின்னாலும், இன்னொரு அரைவட்ட வடிவ மேடை. ஆசிரியர் மூளை சுறுசுறுப்பாக இயங்குவதை அவதானித்தேன்.

''நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னரே 'மேக்-அப்' எல்லாம் முடித்துக்கொள்ளும்படி ஆசிரியர் உத்தரவிட்டார். முடிந்தது. மூன்று மேடைகளையும் எப்படிப் பயன்படுத்தி, நிகழ்ச்சியை நடத்தப் போகிறார் என்று நாம் நினைத்துக் கொண்டிருந்தோம். முதல் நிகழ்ச்சி, இரண்டாம் நிகழ்ச்சி என்று வெண்கட்டியினால் குறியீடுகளை மேடையில் ஆசிரியர் இட்டார்,

''நாட்டிய நாடகமும் ஆரம்பமாகிவிட்டது.

''மூக்குடைபட்ட சூர்ப்பனகையை தேற்றுகிற கட்டம்–

''இரண்டாவது மேடையில் இராவணன் காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். முதலாவது மேடையில் காலகள் இருக்கின்றன.

''சூர்ப்பனகை மூன்றாவது மேடையிலிருந்து அலறிப் புடைத்து ஓடிவருகிறாள்–

''மூன்று மேடைகளையும் ஒரே நேரத்தில் நிறைவு பெறச் செய்த ஆசிரியரின் திறமையை எனக்குள்ளேயே மானசீகமாகப் பாராட்டினேன்''

''லண்டன் எலிசபெத் மகாராணியார் மண்டபத்தில் நடந்த இந்திய விழாவில் கௌரவக் கலைஞர்களாக நானும், ஆசிரியரும் கலந்து கொண்டோம். ஆசிரியர் அர்ச்சுனன்; நான் கண்ணனேன்! பாரதநாட்டு பல இசைக்கலைஞர்களும் இந் நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர். மூன்று நாள் இந்த நிகழ்ச்சி நடந்தது.

''எங்கள் நிகழ்ச்சிகளைப் பார்த்த வெள்ளைக்கார ரசிகர்கள், ஆசிரியரிடம் வந்து ''புருவத்தை எப்படி அசைக்கிறீர்கள்? கைவிரல்களை எப்படி இவ்வளவு அழகாக ஆட்டுகிறீர்கள்?'' என்றெல்லாம் கேள்விமேல் கேள்வி கேட்டு துளைத்துக்கொண்டிருந்தனர். ஆசிரியரும் சளைக்கவில்லை!

''இதுதான் நமது கலையின் தெய்வீகத்தன்மை! இறைவன் ஆட்டுவிக்கிறான்; நாமும் ஆடுகிறோம்!'' என்று ஆசிரியர் அவர்களுக்குப பதில சொன்னார்.

## தாண்டவம் ஆடினோம்

பேர்மிங்காம் நிகழ்ச்சி பற்றி பத்மினி இன்னமும் மறக்கவில்லை.

''தாண்டவம் ஆடினோம்! எங்கள் ஒப்பனைக் கோலங்களைக் கண்டு வியந்த வெள்ளைக்காரர் எங்களிடம் வந்து 'பியூட்டிபுல்', 'லவ்லி' என்று பாராட்டுகளைப் பொழிந்தார்கள்!

''பிரான்சிலும் சில நிகழ்ச்சிகளை நடாத்தினோம் எல்லாமாக 17 நிகழ்ச்சிகளை நடாத்தினோம்.

ஐரோப்பிய அனுபவங்களை எனனுடன் பகிர்ந்து கொண்டிருந்த பத்மினியிடம் ஒரு கேள்வியை கேட்டுவைத்தேன்.

''உங்களிடம் திறமைஇருக்கிறது; இதனால், நீங்களோ ஒரு குழுவை வைத்து, தனித்துச் செல்லும் நோக்கம் இல்லையா?''

பத்மினிக்கு கோபம் வரவில்லை அமைதியாகப் பதில் சொன்னார்

'கலைக் கோயில்' நிறுவனம் கலைஞர் வேல்ஆனந்தன ஆரம்பித்த நடனப் பள்ளியாக இருக்கலாம், ஆனால் அன்று அது அவரது தனிச் சொத்தல்ல அந்தக் கலைக்கோயில் பொதுச்சொத்து

கலைச் சேவையே அதன் முக்கிய பணி! தனித்துச்செல்ல வேண்டுமென்ற நோக்கம் ஏன் வரப் போகிறது?''

## 'ஸ்கொட்'டின் தன்னலமற்றபணி

கலைஞர் வேல ஆனந்தன் குழுவினரை ஐரோப்பியநாடுகளில் நிகழ்ச்சிகளை நடாத்த இந்தப் பெரிய சந்தர்ப்பத்தை அளித்தவர்கள் லண்டனில் பெரும்பணியாற்றி வரும் நம்மவர்களான 'ஸ்கொட்' என்ற நிறுவனமே! சுயநலக்கலப்பற்ற உண்மையான சேவைக்குரியவர்கள் அவர்கள். யாழ்ப்பாணத்து தமிழ் கலைஞர்களுக்கு உரிய அந்தஸ்துகளிக்கவேண்டுமென்ற ஒரே ஒரு நோக்கம் கலைஞர் குழுவை அங்கு அழைத்தமைக்கு காரணமாகும். 'ஸ்கொட்'டை நினைக்கும்போது லண்டனில் வாழும் வி. குகனேந்திரன், டாக்டர்கள் நவரத்தினம், நித்தியானந்தன், ராஜி எல்லோரையும் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவால காலமெல்லாம் மறக்க முடியாது.

- ஈ. கே. ஆர்.

உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி

ஷப்ரு ★ நம்பிக்கை ★ நாணயம் ★ அனுபவம்

நிதி உதவிகள்

- வர்த்தக, விவசாய உபகரண வாடகை கொள்வனவு உதவி
- விவசாயம்,கைத்தொழில், இறக்குமதி வியாபாரம், நிதி ஏற்பாடு
- நீங்கள் விற்கவிருக்கும் காணி, வீடுவளவு சிரமமின்றி நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுத்தல்
- ரி. வி. (கலர்) குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு, CANON கணித்தற்பொறி, மின்விசிறி, மோட்டார் சைக்கிள் -- உடன் விலைக்கும் அல்லது தவணை முறை அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகள்.

தேவை எதுவானாலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

SHABRA UNICO FINANCE LIMITED

(இலங்கை மத்திய வங்கியில் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

தலைமை அலுவலகம்
61, நியூ புளர்ஸ் விதி,
கொழும்பு - 4.

யாழ்ப்பாணம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## நினைவஞ்சலிக் கூட்டம்

(சித்தங்கேணி)

பேராசிரியர் கைலாசபதியின் நினைவஞ்சலிக் கூட்டம் சங்கானை பட்டின சபை நூல் நிலைய மண்டபத்தில் வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. செந்தில்வடிவேல் தலைமையில் இம்மாதம் 15ம் திகதி மாலை நடைபெறவுள்ளது.

வட்டு கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் சைவப்புலவர் திரு. நா க. தங்கரத்தினம் அதிபர் திரு. க. அருணாசலம், சங்கானை பட்டின சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் இரா தணிகாசலம் உட்பட பலர் உரையாற்றுவார்கள்,

## இறுதிப் பரீட்சை

[கோண்டாவில்]

யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்ப நிறுவன பயிற்சி நெறிகளின் பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து இறுதிப் பரீட்சைக்குத் தேற்றும் மாணவர்களிடையே இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்மாணவர்களின் இறுதியான விண்ணப்பம் இம்மாதம் 10ம் திகதி ஏற்கப்படும் என்றும் இம்மாதம் 24ம் திகதியளவில் பரீட்சை நடைபெறலாம் எனவும் நிர்வாகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அறிஞர்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பின்னர் எல்லாரோடும் சேர்ந்து அமர்ந்து கொண்டார். அசல் சைவம் என்பதால் அங்கு பரிமாறப்பட்ட ஆமை சூப்பையோ வேறு அசைவ உணவையோ தொடவும் மறுத்து ஒருகோப்பைதண்ணீர் மட்டும் கொடுங்கள் என்று சொல்லிவிட்டார். இதற்கு முன் இப்படி யாரும் நடந்துகொள்ளவில்லை பரிசாரகர்களுக்கும் பெரும்பாடாய் போய்விட்டது. தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ஒரு போத்தல் குளிர்பானத்தைக்கொடுத்தார்கள்.

''அதில் கொஞ்சம் விஸ்கி விட்டுக்கொள்கிறீர்களா சேர்?''

''நோ, தேங்க்யூ''.

— பி. எஸ். பி.

## ஒணறபிள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிந்தனையுடனும் செயற்பட்டார் இறுதிக்காலம் வரை வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவில் தர்மகர்த்தா சபைத் தலைவராகவும், முல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தலைவராகவும் இருந்தார்

ஒழுக்கசீலராகவும் பண்பாளராகவும் பலதுறையும் அறிந்தவராகவும் இருந்து வன்னி வளம்பெற உழைத்த உத்தமனை நினைவுகூருவது சாலப் பொருத்தமாகும்.

-ச சு. சரவணமுத்து

# "பொலிஸ் - பொதுமக்கள் உறவு வலுப்பெற வேண்டும்"

## – சமாதானசபைத் தலைவர்

[இணுவில்]

"இன்றைய நிலையில் பொலிஸ்—பொதுமக்கள் நல்லுறவு மிகமுக்கியமானது இரு சாராருக்குமிடையில் சகஜ உறவு வலுப்பெற வேண்டுமென்ற உண்மையைப் பொதுமக்களாகிய நாம் உணர்ந்து தலைப்பட்டுள்ளோம். பொலிஸ் இலாகாவும் இந்நேரத்தைப் பயன்படுத்தி நேசக்ரம் நீட்ட வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக சுன்னாகம் பொலிஸ் பகுதியில் ஏற்பட்ட பொலிஸ்—பொதுமக்கள் நல்லுறவால் இணுவில், உடுவில், தாவடி, சங்குவேலி கோண்டாவில், சுன்னாகம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி இயங்கிவரும் இணுவில் சமாதான சபை கடந்த இரண்டரை ஆண்டுகளில் தொளாயிரத்துக்கு மேற்பட்ட பிரச்சனைகளைப் பொலிஸ் நிலையத்துக்கோ, நீதிமன்றத்துக்கோ செல்லவிடாது சமாதானமாகத் தீர்த்துள்ளது. இதனால் பொலிஸ் நிலையத்திற்கு ஏற்பட்டிருந்த வேலைப்பழுவை ஓர் அளவு குறைத்துள்ளது.

இவ்வாறு இணுவில் சமாதான சபைத்தலைவர் திரு. தி சி. சண்முகலிங்கம் சிவகாமி அம்மன் கோயிலில் நடைபெற்ற விசேஷ பூஜை வழிபாட்டின் பின்னர் இடம்பெற்ற புதுவருடத்திற்கான சத்தியப்பிரமாண வைபவத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார். சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன் வலி. தெற்கு பிரதேசசபைத் தலைவர் திரு. செ. இலகுநாதன், சுன்னாகம் பொலிஸ்—பொதுமக்கள் சபைச் செயலாளர் திரு. பொ. கணேசரத்தினசர்மா மற்றும் சமாதான சபை உறுப்பினர்கள் ஆகியோர் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

திரு. சண்முகலிங்கம் தொடர்ந்து பேசுகையில் நீதியை, அமைதியை, சமாதானத்தைக் கிராமங்களின் மட்டத்தில் நிலைநாட்டுவோமானால் நாட்டுமட்டத்திலும், உலகமட்டத்திலும் இவற்றை நிலைநாட்ட முடியும் என்றும் ஒவ்வொருவரும் நட்புமுறை, உறவுமுறை பாராது நடுநிலை நின்று நீதியோடு செயலாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார். [அ]

## கும்பாபிஷேக பூர்த்திவிழா

(புலோலி)

பருத்தித்துறை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேக ஒருவருட பூர்த்தி விழா இம்மாதம் 11ம் திகதி தொடக்கம் 10 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் சமயசொற்பொழிவுகள், சமய இன்னிசை விரிவுரைகள், இசை நிகழ்ச்சிகளும் நடைபெறுவதோடு அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன. (அ)

## வரவு-செலவு....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கான வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் 1983-ஆம் ஆண்டுக்கு வேலைப்பகுதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபா எதிர்பார்க்கப்படுகிறதென்றும், இத்தொகை வருமானத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதென்றும் கூறினர்.

# 'தவப் புதல்வனுகக் கடமையாற்றியவர்'

## பொறியியலாளருக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"தவத்துரை என்றுதான் இவருக்குப் பெயர். ஆனால், தவப்புதல்வன் என்ற பெருமைக்குரியவர் இவர் கடமை உணர்வோடு ஊழியர்களுடன் மிக உள்ளன்போடு இவர் ஆற்றிய சேவையை நாம் மறக்கமாட்டோம்."

இவ்வாறு யாழ்ப்பாணம் நீர்ப்பாசன காரியாலய [illegible]னர் நடாத்திய பிரியாவிடை விழாவில், [illegible] பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண [illegible] நீர்ப்பாசன இலாகாவில் [illegible] பொறியியலாளராகக் கடமையாற்றி—வவுனியாவுக்கு மாற்றலாகிச் செல்லும் திரு அ தவத்துரை மற்றும் இடமாற்றலாகிச் செல்லும் திருவாளர்கள் கருணானந்தன். சொக்கலிங்கம், அம்பிகாநிதி, இராசநாயகம் ஆகியோருக்கு விருந்துபசாரத்துடன் பிரியாவிடை அளிக்கப்பட்டது

திரு. வி என். சமலகாந்தன் பேசுகையில், "நேர்மையாக சேவை செய்த மனிதரை நாம் இழக்கிறோம். தவத்துரை உண்மையில் தவப்புதல்வர் தான்" என்றார்.

பதவியினால் மட்டும் உயர்ந்து அப்பதவியைக்கொண்டு, 'அற்பனுக்குப் பதவி வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்' என்ற வாக்கியத்துக்கு ஏற்ப இங்கு இருந்த ஒருவரால் இங்குள்ள ஊழியர்கள் மிகவும் பாதிக்கப்பட்டதைப் பலரும் வன்மையாகப் பலரும்

(8-ம் பக்கம் பார்க்க)

# பூம்புகார் கொலை வழக்கு:

# "மோசசின் தலையில் 1-ம் எதிரி வெட்டினுர்"

## திருநாவுக்கரசு சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

1ம் எதிரி கடையில் சுருட்டு தரும்படி கேட்க எனது மச்சான் த. சுகுமார் சுருட்டை கொடுத்து காசை வாங்கினுர். பின்னர் 1ம் எதிரி எனது மச்சானுடன் தேவையில்லாமல் கதைத்துவிட்டு படலையடிக்குச் சென்று விசிலடித்து எல்லோரையும் வரும்படி சத்தமிட்டுக் கூப்பிட்டார். 1ம் எதிரியின் கையில் வாள் 2ம் எதிரியின் கையில் அலவாங்கு போல் ஆயுதம் மற்ற எதிரிகள் கைகளிலும் ஆயுதங்கள் இருந்தன. என் கடையில் நின்ற ச. யேசுவை எல்லா எதிரிகளும் தாக்கினுர்கள்.

அரியாலை பூம்புகார் கொலை வழக்கில் சாட்சியமளித்த சின்னத்தம்பி திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதிபதி வி. ஜெகசோதி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த தா. தியாகராசா. ஜ ரத்தினம் பொ. மகேந்திரன் அல்லது கட்டைச்சி, பொ. குலேந்திரன் அல்லது செல்வம், ப. துரைசிங்கம் அல்லது செட்டி, ம. விஜயகுமார் அல்லது விஜயன். ம மகேந்திரராஜா அல்லது ரவி. ஆகியோர் 82 மார்ச் 29ல் சரவணமுத்து மோசஸ் என்பவரை வெட்டி அடித்து கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம், 2ம், 3ம், 5ம் 7ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் பி சபாரத்தினம், சட்டத்தரணி ரி லிங்கராஜாவின் அனுசரணையுடன் ஆஜரானுர். 5ம், 7ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ரி லிங்கராஜா ஆஜரானுர் வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ஆர் ரி. விக்னராசா பொலிஸாரின் உதவியுடன் ஆஜரானுர்

சின்னத்தம்பி திருநாவுக்கரசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 18ம் தேதி ஒரு சம்பவம் நடந்தது இராசேந்திரம் என்பவர் எனது கடையில் கடன் கேட்டார். என் மனைவி கடன்கொடுக்கமறுக்க, இராசேந்திரம் என்பவர் மனைவியை ஏசினுர் மறுநாள் 29ம் தேதிதான் மற்றச் சம்பவம் நடந்தது. அன்று என் கடையில் நின்ற யேசுவை எல்லா எதிரிகளும் தாக்கினர். 2ம் எதிரி என்னைத் தாக்க நான் மண்வெட்டிப்பிடியால் தடுத்துவிட்டுஓடினேன் யேசு இறந்துவிட்டான். திருநாவுக்கரசுவை பிடியுங்கள் என்று அப்போது 1ம எதிரி சொன்னுர். என்னைத் துரத்திக்கொண்டுவரும்போது ச. மோசஸ் வந்தார். அவரை 2ம் எதிரி வரும்படி கேட்டார். உடனே 1ம் எதிரி மோசசின் தலையில் வெட்டினுர். பின்பு எல்லா எதிரிகளும் மோசசை தாக்கினுர்கள். நான் ஓடிச்சென்று அரியாலைச் சந்தியில் மகாலிங்கம் என்பவருக்கு [illegible] கூறிவிட்டு [illegible] பிடித்து அனுப்பினேன். அவர் வைத்தியசாலைக்கு காயப்பட்டவர்களை கொண்டுசென்றுர். நான் போகவில்லை.

சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: எதிரிகள் 7 பேரையும் தெரியுமா?–3 வருடமாக நன்ருகத் தெரியும்.

சட்: பொலிசாருக்கு கொடுத்த வாக்குமூலத்தில் 1ம், 2ம் எதிரிகளைத்தான் நன்ருகத் தெரியும், மற்றவர்களை சரியாக தெரியாது என்று கூறியிருந்தால் அது சரியா? பிழையா?–பிழை.

சட்: சுகுமார்தான் சுருட்டுக் கொடுத்து காசு வாங்கினுரா?–ஆம்.

சட்: பொலிசாருக்கு நீர்தான் சுருட்டுக் [illegible] காசு வாங்கியதாக கூறியிருந்தால் அது சரியா? பிழையா?–பிழை

சட்; 2ம் எதிரியின் கையில் என்ன ஆயுதம் இருந்தது என்று தெரியுமா?–ஆம வட்டமான உருண்டை ஆயுதம்.

சட்: வாளா?–இல்லை, நீண்ட இரும்பு ஆயுதம்.

சட்: வட்டமான இரும்பு ஆயுதம் என்பது நிச்சயமாக தெரியுமா?–ஆம்.

சட்: பொலிசில் 2ம் எதிரியின் கையில் வாளோ அல்லது கொட்டனே இருந்தது என்று கூறியிருந்தால் அது சரியா?–அப்படி கூறியிருந்தால் பிழை

விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (அ)


R. P. G. - II ஆர். பி. ஜி. - II

# COMPUTER PROGRAMMING COURSE

# கம்பியூட்டர் நிகழ்ச்சி முறைப் பயிற்சிநெறி

## IBM System / 34 COMPUTER

(I. B. M. முறைமை R. P. G. II (கம்பியூட்டர் நிகழ்ச்சிமுறைப் பயிற்சிநெறி)

R. P. G. II நிகழ்ச்சி முறையினைக் கற்று கம்பியூட்டர் விற்பன்னராகுங்கள்

பயிற்சி முறை: 19-1-1983 முதல் இரண்டு மாத பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. (திங்கள் - புதன் - வெள்ளிக்கிழமை நாட்களில்)

நிலை: I எண்முறைக் கம்பியூட்டருக்கு அறிமுகப்படுத்தல்.

நிலை: II நிகழ்ச்சிமுறைபற்றிய எண்ணக் கருவூட்டம்.

நிலை: III R. P. G. II நிகழ்ச்சி முறையிடல்

நிலை: IV விடயப் படிப்பு. PRACTICAL TRAINING ON COMPUTER.

நிலை: V கம்பியூட்டர் மூலம் கம்பியூட்டர் பயிற்சி (COMPUTER ASSISTED TRAINING)

கட்டணம்: பயிற்சிக் கட்டணம்: ரூ. 6000/= (தவணை முறையில் செலுத்தலாம்)

கல்வித்தகைமை: க. பொ. த. (சாதாரணம்) G. C. E. O/L) கணிதம் திறமைச்சித்தி பெற்றிருத்தல் .வேண்டும்

தெரிவு: உளச்சார்புப் பரீட்சையின் தேர்வு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

R. P. G. II நிகழ்ச்சி முறைப் பயிற்சி பெற்ற விற்பன்னர்கட்கு இலங்கையில் மட்டுமின்றி அகில உலகத்திலும் வேலைவாய்ப்பு உண்டு.

தொடர்பு கொள்ளவும்:

# GLOBAL COMPUTERS (PTE.) LTD.,

## குளோபல் கம்பியூட்டர்ஸ்(பிரைவேட்) லிமிட்

இல: 14- 1/1 ஸ்ரப்ஸ் பிளேஸ், கொழும்பு-5

NO: 14- 1/1, STUBBS PLACE, COLOMBO-5

தொலைபேசி: 580551

## ஆலோசனைக் கூட்டம்

(சித்தன்கேணி)

மூளாய் கிராம அபிவிருத்திச்சங்கம் புனரமைப்புத் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 10ம் திகதி காலை 10 மணியளவில் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு 2-30
ஜெமினி-சாவித்திரி
கற்பகம்

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
CAPTAIN AMERICA

மனோகரா
(யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, 9-30.
MELGIBSON in
MAD MAX 2
(Action packed thriller—Adults Only)

சாந்தி யாழ்நகர் 7 — 11-1-83
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
CLINT EASTWOOD in
ESCAPE FROM ALCATRAS
Dont miss this!
ACTION PACKED
Color Movie

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

கடைசி வாரம்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்

ராணி தினசரி 10-30, 3-30, 6-00, 9-30
9-1-83 வரை
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்
10-1-83 முதல் ராமன் எத்தனை ராமனடி

இன்னும் சில தினங்கள் தினசரி 4 காட்சிகள்
றீகல் (யாழ். நகர்)
நான் (ஈஸ்ட்மன் கலர்)
விரைவில் எங்கவீட்டுப்பிள்ளை

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்)
காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணிவரை ஆசனங்கள் முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.
காதல் என்பது தெய்வீகமானது. இந்த தெய்வீகத்தின் ஆலயமாக விளங்கும் வசந்த மாளிகையை இன்றே பாருங்கள். ரசிகப்பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி.
சிவாஜி ✯ வாணிஸ்ரீ
பாலாஜி, நாகேஷ்
நடித்த
"வசந்தமாளிகை"

# மன்னார் செய்திகள்

[மன்னார்]

மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 78 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற யானைத்தந்த வழக்கில் எதிரியை விடுதலை செய்த நீதவான் திரு. மடவெல எதிரியிடம் இருயானைத் தந்தங்களையும் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் 'மன்னாரைச் சேர்ந்த அபுசாலி என்பவர் காட்டுயானையைச் சுட்டுக் கொன்று அதன் தந்தங்களை எடுத்துச் சென்றாரென வன பரிபாலன சபையினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிசார்பில் சட்டத்தரணிகள் சண்முகநாதன், அருமைநாயகம் ஆகியோரும், அரசதரப்புசட்டத்தரணியாக திரு. டெப் ஆகியோரும் ஆஜராகினர்.

### ஊழியர் நியமனம்

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு வேண்டிய வைத்திய அதிகாரிகளும் தாதிமாரும், ஏனைய ஊழியர்களும் விரைவில் நியமிக்கப்படுவார்கள். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலைக்குழு தலைவர் ஜனாப் என். எஸ். எம் கௌது தெரிவித்தார்.

### கிராமிய பாலம்

மன்னார் – அரிப்பு கிராமமக்களின்வேண்டுகோளுக்கிணங்க சிலவாத்துறைக்கும் அரிப்புக்கு மிடையேயுள்ள புலிப்பாஞ்சான் என்னும் ஓடையின்மேல் அரசினால் கிராமியப்பாலம் அமைக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மூதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்ரூப் மேற்கொண்டுவருகிறார். (க)

### இலங்கை வங்கிக்கிளை

மன்னார் சிலாவத்துறைப் பகுதியில் இலங்கை வங்கிக்கிளை ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை மூதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச் மஹ்றூப் மேற்கொண்டு வருகிறார்.

### நூல்கள் வழங்கப்படும்

மன்னார் பெரியகுஞ்சிக்குளம் மாதா கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்று அமைக்கப் படுவதுடன் பொதுநூல்நிலையத்திற்கு வேண்டிய புத்தகங்களும் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு பி. எம். செபமாலை தெரிவித்தார்.

### மன்னார் இந்து மக்கள் எதிர்காலம்

மன்னாரைத் தாயகமாக கொண்டு வாழும் இந்து மக்களின் எதிர்காலம்பற்றி தீவிர கவனம் செலுத்தப்படும். என்று மன்னார் முன்னாள் எம். பி ஜனாப் எம். எஸ் ஏ றகீம் உயிலங்குளத்தில் நடைபெற்ற ஐ தே கட்சி கூட்டமொன்றில் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. எம். கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் மன்னார் எம். பி. தமது உரையில்; "இந்து மக்கள் கல்வியில் மற்றும் வேலைவாய்ப்புக்களில் பயன்பெற ஐ. தே கட்சி மூலம் மாவட்ட அமைச்சினூடாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

மன்னார் உப்புக்குளம் வட்டாரத்தில் வாழும் இந்து மக்களின் எதிர்கால நலன்பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

### பாதுகாப்பற்ற கிணறுகள்

தலைமன்னார் பியர்ப்பகுதியிலுள்ள கிணறுகள் யாவும் பாதுகாப்பற்ற முறையில் கட்டப்பட்டுள்ளதாலேயே விபத்துகள் இடம்பெற்றுவருகின்றது இந்நிலையைப்போக்க சகல கிணறுகளும் பாதுகாப்பான முறையில் உடனடியாக கட்டப்படவேண்டும். என்று எருக்கலம்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி ஜனாப் எம். பி. ஏ. ஓ. ஜப்பார் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

### சிரமதான பணி

மன்னார் இரட்டைக்குளம் இளம் விவசாயிகளால் முருங்கன் புனித யூதாதேயூ ஆலய சுற்றாடல் சிரமதான மூலம் சுத்தம் செய்யப்பட்டது

இச்சிரமதானப்பணியைமுருங்கன் விவசாயப்பண்ணை உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. யோன் பத்திநாதர் ஆரம்பித்துவைத்தார்.

## பால் சேகரிப்பு நிலையம்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்குமுகமாக 'பால் சேகரிப்பு" நிலையமொன்று இவ்வருட இறுதிக்குள் திறந்து வைக்கப்படுமெனப் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் உறுதியளித்துள்ளார்.

வட மராட்சிப் பகுதியில் "பால் சேகரிப்பு" நிலையமொன்றில்லாமையினால் கால் நடை வளர்ப்போர் பெரும் பாதிப்படைந்து வருவதாகவும் கால் நடை வளர்ப்போரின் இப்பாதிப்பை நீக்குவதற்காக இவ்வருட இறுதிக்குள் இப்பகுதியில் பால்சேகரிப்பு நிலையமொன்றை திறப்பதற்காக எம். பி. துரைரத்தினம் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு தொண்டமானுடன் தொடர்பு கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

## ரொபது...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

மீது பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டிருந்ததென்றும மேலும் தெரியவந்துள்ளது.

இவரைப் பிடித்த சுழிபுரம் மேற்கு கிராம சேவையாளர் திரு. கந்தையா தர்மலிங்கம் இவரை காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைத்துள்ளார்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இவர் பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்துத் திரிந்ததாக தெரிவித்த காங்கேசன் துறைப் பொலிசார் இவர் குறித்து மேலும் விசாரணை மேற கொண்டுள்ளனர்.

இவர் மூலம் பல திருட்டுக்கள் துப்புத்துலங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [க]

## இளவாலையில் முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வடமேற்கு கிராமோதய சபையின் முதியோர் தின விழா, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கிராமோதய சபைத் தலைவர் திரு வி சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், வலிவடக்கு பிரதேச சபைத் தலைவரும், தெல்லிப்பழை ப. நோ கூ. ச. இயக்குநர் சபைத்தலைவருமான திரு எஸ். சிவமகாராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு தி. நாகேஸ்வரன், வானொலிக் கலைஞர் திரு ச யேசுரட்ணம், கூவில் சிவானந்த சனசமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. க. குழந்தைவேலு பாவனையாளர் சங்க செயலாளர் திரு அ. மே. யோசேப்பு, ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். மெய்கண்டான் ம. வித்தியாலய அதிபர் திரு. செல்லத்துரை முதியோர் பற்றிய அறிமுக உரைகளை நெறிப்படுத்தினார்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. ச வை சேர்ந்த மகளிர், பாலர் பிரிவைச் சேர்ந்தவர்களின் குறத்தி நடனம், வசந்தபுரம் சர்வோதயச் சிறுவர்களின் நாடகம், நடனம் மெய்கண்டான் கலா மன்றம் நாடகம் ஆகியன இடம் பெற்றன. கிராமோதய சபை செயலாளர் திரு. உ. ரவீந்திரன் நன்றி தெரிவித்து பேசினார்.

(மா)

## பயிற்சி நெறிகள்

[புலோலி]

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி முழுநேரத் தொழில்நுட்ப பிரிவில் இம்மாதம் ஏழு பயிற்சிநெறிகள் ஆரம்பிக்க படிவுள்ளன

தட்டெழுத்து, சுருக்கெழுத்து [ஆங்கிலம்], மோட்டார் இயந்திரவியல், மின்வாயு ஒட்டுவேலை, வானொலியியலும் இலத்திரனியலும், மின்னிணைப்புச் செய்தல், கட்டிடப்பட வரைஞர் பயிற்சி, உடைவெட்டுதலும் உடை அமைத்தலும் பெண்கள்) ஆகிய பயிற்சி நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இப்பயிற்சிகள் ஆறுமாதகாலத்திற்கு வழங்கப்படுமெனவும் அமைப்புப போதனாசிரியர் த. வீரசிங்கம் தெரிவித்தார். [க]

பெற்றோர்கள்-ஆசிரியர்கள்-மாணவர்கள்
✯ மாணவர்களுக்கான சகல அப்பியாச கொப்பிகள்
✯ பாடசாலை உபகரணங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.
✯ மின்சார உபகரணங்கள்
✯ அலங்கார அழகு சாதனங்கள்
✯ அன்பளிப்பு பொருட்கள்
✯ காகிதாதிகள்
அனைத்துக்கும்
அம்பலவாணர் அன் சன்ஸ்
(கடைத்தெரு விநாயகர் ஆலயம் முன்பாக)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291

### தமிழ் எழுத்தாளர்களிடம்

# சாகித்தியமண்டல பரிசை பகிஷ்கரிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் 30 தமிழ் எழுத்தாளர்களுக்கு இந்தமாத இறுதியில் வழங்கவிருக்கும் சாகித்திய மண்டலப் பரிசை இவர்கள் அனைவரும் பகிஷ்கரிக்க வேண்டும்,

இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள ஒன்பது அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன,

தேசிய கலை இலக்கியப் பேரவை, யாழ் நாடக அரங்குக்கல்லூரி, அளவெட்டி அருயிறு படைப்பாளிகள் வட்டம், கலை இலக்கிய வட்டம், 'புதுசு' சஞ்சிகைக்குழு, மேகம் சஞ்சிகை குழு, இளவாலை நாடகமன்றம், புங்குடுதீவு இலக்கிய வட்டம், யாழ் சமூக விஞ்ஞான கல்வி வட்டம் ஆகியனவே இந்த ஒன்பது அமைப்புகளுமாகும். அனைத்து தமிழ் எழுத்தாளர்களும் கலைஞர்களும் ஒன்றிணைந்து இப்பரிசுகளை பகிஷ்கரிக்க கோருவதன் மூலம் தமது எதிர்ப்பை அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டுமென இக்கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

1976-முதல் வழங்கப்படாமலிருந்து வந்த தமிழ் எழுத்தாளருக்கான சாகித்திய மண்டலப் பரிசுகள் இப்பொழுது 77-முதல் 4 வருடங்களுக்கு மொத்தமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர் மு. நித்தியானந்தனின் ''வைகறை''வெளியீடுகளான 'நாமிருக்கும் நாடே', 'ஒரு கூடைக்கொழுந்து' என்னும் சிறுகதைத் தொகுதிகளும் சாகித்திய மண்டலப் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் இப்பரிசுகளையிட்டு தமிழ் எழுத்தாளர்கள் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும் என்றும் அக்கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. [வெ]

## 1982ல்-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கத்தவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்களின் பெயரில் அறக்கொடைத் திட்டங்கள் மூலமாகவும், நிரந்தர வைப்பிலும் இருபத்தி நான்கு லட்சம் ரூபாவை வங்கிகளில் வைப்பிலிட்டுள்ளார்கள்.

இவை தொழிலாளர் தலைமையில் இச்சங்கங்கள் ஈட்டிய ஒரு பெரும் சாதனையாகும், 1983-ம் ஆண்டிலும் இச்சங்கங்கள் முன்னேறிச்செல்ல வேண்டும் என்றார்.

## கச்சாய்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு வீடுகள் கட்டி வழங்கப்பட்டன சகல வசதிகளுமடங்கிய இந்த மாதிரிக் கிராமத்துக்கு 'ராஜ கிராமம்' எனப் பெயர் சூட்டப்பட்டதுடன் பிரதமர் திரு ஆர். பிரேமதாசவே திறந்து வைத்தார். உடுப்பிட்டி எம். பி. திரு த. இராசலிங்கம் தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர்களின் ஒத்துழைப்புடன் எடுத்த முயற்சியின் பேரில் இந்த மாதிரிக்கிராமம் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது

இரண்டாவது மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்ட கச்சாய் மாதிரிக்கிராமம் பிரதமமந்திரியின் இணைப்புச்செயலாளரான திரு. எஸ். எஸ் சண்முகலிங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பேரில் வழங்கப்பட்டது.

அக்டோபரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் காலத்தில் திரு சண்முகலிங்கம் சாவகச்சேரித்தொகுதியில் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசார வேலைகளில் ஈடுபட்டிருந்தார் அப்பொழுது சாவகச்சேரி தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு எஸ். கே. வேலாயுதபிள்ளை, கச்சாய் பகுதியை மாதிரிக் கிராமமாக அமைத்துத்தர வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த வேண்டுகோளுக்கமைய இந்த மாதிரிக் கிராமம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இந்த மாதிரிக் கிராமத்தில் கட்டப்படும் 50 வீடுகளும், கச்சாய் உப-அலுவலக எல்லைக்குள் வசிக்கும் வீடற்ற ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கே வழங்கப்படுமென, அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வீடுகள் 83-ம் 84-ம் ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்படுமெனவும், படிப்பகம், விளையாட்டு மைதானம், உபதபாலகம், வர்த்தக நிலையம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (மா)

## தமிழ் மக்களுக்கு சிறந்த...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மண்டபம் வரை அழைத்து வரப்பட்டார்.

இலங்கை இருமாவட்டக் கவர்னர்களில் 'பி' கவர்னர் வைத்தியகலாநிதி அரியம் நல்லையா உட்பட மற்றும் லயன் பிரதி ஆளுநர்கள் குத்துவிளக்கேற்றி வைத்தனர் இலங்கை தேசிய கீதம் பாடப்பட்டதை தொடர்ந்து விழா ஆரம்பமானது.

இலங்கை அடங்கிலுமிருந்து லயன் உறுப்பினர்கள் மற்றும் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா யாழ். மாநகர ஆணையாளர் திரு. வி. கே. சிவஞானம், அபிவிருத்திசபை, மாநகரசபை உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர்.

திரு. இராஜா விசுவநாதன் தொடர்ந்து பேசுகையில் லயன் சக்கரவர்த்தி தமிழ்மக்களின் அபிலாஷைகளை மனதில் வைத்து சேவையாற்றி வருகிறார் என்று புகழாரம் சூட்டினார்.

யாழ். பொதுசன நூலகம் எரிக்கப்பட்டதற்கு திரு லயனல் பெர்ணாண்டோ விசாரணைக் குழு நஷ்டஈடாக ஒரு கோடி ரூபா சிபார்சு செய்திருந்தும் அதில் சிறுதொகையே கிடைத்தது என்று குறிப்பிட்ட திரு. விசுவநாதன் மீதித்தொகையும் கிடைக்குமென நம்பிக்கை தெரிவித்தார்.

''நூல் நிலையத்தைப்புனருத்தாரணம் செய்ய சகல நாடுகளிலிருந்தும் உதவிகள் கிடைத்து வருகின்றன. லயன்ஸ் கழகம் கூட, நூல்நிலையத்தின் சிறுவர் பகுதியை முற்று முழுதாகத் திருத்தி அமைத்து இயங்கசெய்வதற்கு முன்வந்துள்ளது. அதற்கு லயன் டாக்டர் யோகு பசுபதி தம்முடன் தொடர்பு கொண்டிருந்தார்'' என்றும் திரு. விசுவநாதன் தெரிவித்தார். லயன்ஸ் கழகத்தின் ஒத்தாசை மேலும் நூல் நிலையத்துக்குக் கிடைக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

லயன்ஸ் கழகத்தின் சர்வதேசப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள லயன் சக்கரவர்த்தி விஜயநாதன் [illegible] அளிக்கப்பட்ட பாராட்டு விழாவுக்கு நன்றி தெரிவித்துப்பேசி பேசினார்.

''சாதி-இன-மத வேறுபாடு இன்றி பின்தங்கிய மாவட்டங்களுக்கும், மக்களுக்கும்சேவை செய்வதே லயன்ஸ் கழகத்தின் முக்கிய கடமையாக இருக்கிறதென்று லயன் விஜயநாதன் வலியுறுத்தினர்.

[illegible]மக்களை கைதூக்கிவிடுவதும் லயன்ஸ்கழகத்தின் கொள்கையாகும் என்றும் குறிப்பிட்ட லயன் விஜயநா[illegible] இலங்கையின் அபிவிருத்திக்குக்குரல் எழுப்புவேன் என்றும் அதற்கு லயன்ஸ் கழக உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆளுநர் வைத்திய கலாநிதி லயன் அரியம் நல்லையா லயன் பேராசிரியர் க. மகேசலிங்கம் உட்பட மற்றும் லயன்ஸ்கழக முக்கிய பிரமுகர்கள் உரைநிகழ்த்தினர். [மா]

## லோகசபை தேர்தல்: தெலுங்குகட்சி வெற்றி

புதுடில்லி ஜன 8

ஆந்திரா பிரதேசத்திலுள்ள நெல்லூர் தொகுதியில் நடைபெற்ற லோகசபை இடைத்தேர்தலில் திரு. என். டி. ராமராவ்வின் தெலுகு தேசக்கட்சி வெற்றிபெற்றுள்ளது.

## தவப்புதல்வன்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கண்டித்தனர்.

திருவாளர்கள் முருகேசு, ஜெயசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோருட்பட பலரும் பேசினர்.

ஒரு மைலுக்கு அப்பால் உள்ள பொறியியலாளர் திரு. தவத்துரையின் இல்லத்துக்கு அவரை சக உத்தியோகத்தர்கள் தோளில் சுமந்துகொண்டு சென்றுவிட்டனர்.

## மன்னார் - கொழும்பு நேரடி தொலைபேசி தொடர்பு

[மன்னார்]

மன்னார்-கொழும்பு நேரடி தொலைபேசி தொடர்பு நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அனுராதபுரம் பிரதம பொறியியலாளர் திரு. பெரேரா நேரடி தொலைபேசி தொடர்பை ஆரமபித்து வைத்தார்.

உத்தியோகபூர்வமான திறப்பு விழா இம்மாத இறுதியில் நடைபெறும். (க)

## ஐந்து மாநிலம்-

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பதி பதவி உருவாக்கப்படும் பட்சத்தில் அப்பதவி மலையகத்தமிழர்களின் தலைவரான திரு. எஸ். தொண்டமானுக்கு வழங்கப்படலாம் என்றும் நம்பப்படுகின்றது. [இ-பெ]

## பாகிஸ்தான்--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இன்னும் மூன்று டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன. (வெ)

## காங்கேசன் 3ம் கட்டப்பிரிவு விபத்து மரண விசாரணை ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3-ம் கட்டப்பிரிவில் இடம் பெற்றவிபத்து மரணம் தொடர்பான மரண விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது,

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3-ம் கட்டப்பிரிவில் இடம் பெற்ற தனியார் டிராக்டர் விபத்தொன்றில் 3-ம் கட்ட தொழிலாளியான கொல்லங்கலட்டியைச் சேர்ந்த கார்த்திகேசு அருமைத்துரை (40 வயது) என்பவர் பலியாகியிருந்தார்,

இது தொடர்பான மரண விசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

விபத்தில் பலியானவரின் மனைவி புவனேஸ்வரி, சம்பவத்தை நேரில் கண்ட இம்மானுவேல் கிறிஸ்ரர் புஷ்பராஜா, பொன்னையா திருச்செல்வராஜா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சாட்சியங்களையடுத்து மரண விசாரணை அதிகாரி விசாரணையை ஒத்திவைத்தார்

காங்கேசன்துறை பொலிசைச்சேர்ந்த கான்ஸ்டபிள் எஸ். மாணிக்கவாசகர் மரண விசாரணைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். (க)

## சமாதான நீதவான்

(மன்னார்)

எருக்கலம்பிட்டியைச்சேர்ந்த மாணிக்க வியாபாரியான எம். ஏ. வாகிது ஹ ஜியார் மன்னார் மாவட்ட நீதவான் திரு நிஸங்க உடலகம முன்னிலையில் சமாதான நீதவானகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

எருக்கலம்பிட்டி காட்டுபாவா சாகிபு மசூதி, சின்ன மசூதி ஆகியவற்றின் நம்பிக்கையாளரான இவர் சிறந்த சமூகத் தொண்டருமாவார்.

## ஏழாலையில் வரவேற்பு

(மாவிட்டபுரம்)

அமெரிக்காவிலிருந்துவருகை தந்துள்ள ஸ்ரீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு இன்று (9-1-83) ஏழாலையில் வரவேற்பளிக்கப்படவுள்ளது.

ஏழாலை சைவ சமய அபிவிருத்திச் சங்க ஆதரவில் இடம்பெறும் இவ்வரவேற்பு வைபவம் ஏழாலை மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வரவேற்பு வைபவத்திற்கு முன் மல்லாகம் சந்தியிலிருந்து சுவாமிகளும், அவரது சீடர்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்கள். (க)

## கடனுதவி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 88 குடும்பங்களுக்கு உலக தரிசன இயக்கத்தினால் மொத்தம் 19 ஆயிரத்து 850 ரூபா கடனுதவியாக வழங்கப்பட்டது.

இக்கடனுதவி ஆடு, மாடு, கோழி வளர்ப்பையும், மேட்டு நிலப் பயிர்ச்செய்கையையும் ஊக்குவிக்கும்பொருட்டு வழங்கப்பட்டது.

## இடமாற்றம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் எழுதுவினைஞராக கடமையாற்றிய செல்வி மேரி. எமல்டா தோமஸ் இம்மாதம் 17ம் திகதி தொடக்கம் யாழ் கச்சேரி காணி கிளை அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## யாருடையது?

யாழ். மாநகர சபை அலுவலக நடைபாதையில் தேசிய அடையாள அட்டையொன்றினை ஜனாப் முஸ்தபா கமல் என்பவர் கண்டெடுத்து ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிக் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## மாட்டுக்கள்ளன் மாட்டிக் கொண்டார்

(தணுக்காய்)

மாட்டுத் திருடன் ஒருவர் வகையாக மாட்டிக்கொண்ட சம்பவம் தணுக்காயில் இடம் பெற்றுள்ளது.

தணுக்காய் யோகபுரம் மல்லாவிபகுதியில் அடிக்கடி மாடுகள், ஆடுகள் [illegible] மறைந்து வருவது சில நாட்களாக இருந்து வீடுகளிலும், பட்டிகளிலும் கட்டி வைத்த ஆடு, மாடுகள் கூடப் பெருந்தொகையாக அண்மைக்காலங்களில் களவுபோய் இருந்தன.

சம்பவதினம் வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த இருவாலிபர்கள் தணுக்காய் பகுதியிலுள்ள ஒட்டன் குளக்கிராமத்தில் களவாக 2500/--ரூபா பெறுமதியான ஒரு எருது மாட்டை இரவோடு இரவாகத் திருடிக் காட்டு வழியே கொண்டு சென்ற சமயத்தில் அவ்வழியே அயல் கிராமத்து வாலிபர் ஒருவர் தனது வயலில் இருந்து வந்ததாகவும். இதைக் கண்ணுற்ற அவ்வாலிபர் அந்த இருவர் மீதும் சந்தேகம் கொண்டு ஓடோடிச் சென்று கிராமத்து வாலிபர்கள் இருவரை அழைத்து வந்து மாட்டுக் கள்வரைத் துரத்திப் பிடித்தபோது ஒருவன் காட்டில் பாய்ந்து ஓடித் தப்பிவிட்டதாகவும் மற்றவரும், மாட்டிக் கொண்டதாகவும் மாட்டைக் கைப்பற்றிய வாலிபர்கள் கள்வனுக்கு நல்ல பாடம் புகட்டி தணுக்காய் கிராம சேவை அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் பின்பு கிராமசேவை அலுவலர் மாட்டுத் திருடனை மாங்குளம் பொலிசாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிகிறது. பொலிசாரின் விசாரணையில் தான் மாடுகளவாடி விற்று வருவதாக இந்நபர் ஒப்புக் கொண்டார். இவர் மீது வழக்குத் தொடரப்படவிருக்கின்றது. [அ]

## பாடப்புத்தகவிநியோகம்

(தணுக்காய்)

யோகபுரம் பகுதியிலுள்ள வறிய குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை புத்தகங்கள் விநியோகிக்கப்படவிருக்கின்றன, யோகபுரம் கிராமோதய சபைபிரதேசத்திலுள்ள வறியமாணவர்களுக்கு இலவசமாக பாடப்புத்தகங்களை வழங்க யோகபுரம் கிராமோதயசபைமுடிவுசெய்துள்ளது

கிராமோதய சபை தலைவர் திரு, வி வேதநாதன் தலைமையில் நடைபெற்ற கிராமோதயசபை கூட்டத்திலே இம்முடிவு எடுக்கப்பட்டது. கிராமோதயசபை நிதியிலிருந்து சுமார் 10 வறிய மாணவர்களுக்கு முதற்படியாக இலவசமாக பாடப்புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவிருக்கின்றன.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office, Sri Lanka, under number Q 8. 100236/81 Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.